
|| ஸ்ரீ: ||

|| ஸ்ரியை நம: ||

|| ஸ்ரீமதே ஹயக்ரீவாய நம: ||

|| ஸ்ரீமதே ராமாநுஜாய நம: || 2482

|| ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ||



ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகனருளிச்செய்த ரஹஸ்யங்களில்

# ஸ்ரீமத் ஸம்ப்ரதாய பரிசுத்தி

முதலான

# ஏழு ரஹஸ்யங்கள்.

இவை

திருவஹீந்திரபுரம் சேடலூர் வித்வான்

பகவத் விஷயம் பண்டிதபூஷணம்

ஸ்ரீ. உ.ப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியால்

பரிசோதிக்கப்பட்டு,

குன்னத்தூர் வே. த. ஸ்ரீநிவாஸராமாநுஜ தாஸரால்

ப்ரசுரம் செய்யப்பட்டது.

நோபில்பிரஸ், திருவல்லிக்கேணி, சென்னை.

1925

விலை அணா 5.


|| ஸ்ரீ: ||

|| ஶ்ரியை நம: ||

|| ஸ்ரீமதே ஹயக்ரீவாய நம: ||

|| ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ||

|| ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம: ||



ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனருளிச்செய்த ரஹஸ்யங்களில்

## ஸ்ரீமத் ஸம்ப்ரதாய பரிசுத்தி

முதலான

# ஏழு ரஹஸ்யங்கள்.

இவை

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான்

பகவத் விஷயம் பண்டிதபூஷணம்

**ஸ்ரீ. உ. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியால்**

பரிசோதிக்கப்பட்டு,

குன்னத்தூர் வே. த. ஸ்ரீநிவாஸராமாநுஜதாஸரால்

ப்ரசுரம் செய்யப்பட்டது.

நோபில்பிரஸ், திருவல்லிக்கேணி, சென்னை.

1925

விலை அணா 5.

# முகவுரை.

ஸ்ரிய:பதியான ஸர்வேஸ்வரன் சேதநோஜ்ஜீவனார்த்தம் ஆழ்வார் பலரையும், பின்னர் ஸ்ரீமந் நாதமுனிகள் முதலிய ஆசார்யர்களையும், "அடையார்கமலத்தலர்மகள் கேள்வன் கையாழியென்னும், படையொடு நாந்தகமும் படர்தண்டும் ஒண்சார்ங்கவில்லும், புடையார் புரிசங்குமிந்தப் பூதலங்காப்பதற்கென்று, இடையே யிராமாநுச முனியாயின விந்நிலத்தே" என்றபடி தன் பஞ்சாயுதாம்சங்களைச் சேர்ந்து இராமாநுசனாகவும் அவதரிப்பித்து அவரவர்கள் ஸ்ரீ ஸூக்திகளால்பலரைத்திருத்தியும், பின்னர் தூர்வாதிகளின்உபத்திரவத்தால் ஸம்ப்ரதாயம் சீர்கேடுற்ற ஸமயத்தில் "வேங்கடேஸாவதாரோயம்" என்றும், "பின்னும் வென்றிபுகழ் திருவேங்கடநாதனென்னும் குருவாய்நின்று நிகழ்ந்தும்மேல் நின்றநோய்கள் தவிர்த்தனனே" என்றுஞ் சொல்லுகிறபடி தானே தூப்புல் நிகமாந்த மஹாதேசிகனாய் அவதரித்து, வியன்கலைகள் மொய்த்திடுநாவின் முழக்கத்தாலே வாதியர்களை மூலமறக் கைத்து, அவர்களால் ஸாதுக்களுக்கு உண்டாகி இருந்த துன்பத்தை நீக்கி ஸம்ப்ரதாயம் சீருறச்செய்த நூல்கள்பல. அவற்றில் ஸகலரும் ஸுலபமாய் அறிந்து உஜ்ஜீவிப்பதற்காக அருளிச்செய்யப்பட்டவைமுப்பத்திரண்டுரஹஸ்யங்கள் எனப்படும். இவை மணிப்ரவாள நடையில் மிகவும் ஸரளமாய் அருளிச் செய்யப்பட்டிருந்த போதிலும் காலத்தின் வைபரீத்யத்தினால் ஆர்யபாஷை (ஸம்ஸ்க்ருதபாஷை)யானது அப்யஸிக்கப்படாமல் போய்விட்டபடியினால் ௸ க்ரந்தங்களை ஸகலரும் ஸேவிக்கமுடியாமல் போயிற்று. ஆகையினால் ஆர்யபாஷையில் பரிசயம் இல்லாதவர்களும் ஸ்ரீதேசிகனுடைய ஸ்ரீ ஸூக்திகளை ஸேவித்து க்ருதார்த்தர்களாக ஆகவேண்டியதற்காக ௸ ரஹஸ்யங்களில் முதல் ஏழு ரஹஸ்யங்கள் முழுமையும் தமிழ் லிபியில் அச்சிடப்பட்டு இப்பொழுது வெளியிடப்படுகிறது. இதில் பாட்டுக்களுக்கும் ஸ்லோகங்களுக்கும் பதவுரை திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத்விஷயம் பண்டிதபூஷணம் ஸ்ரீ. உ. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியால் அருளிச் செய்யப்பட்டு சென்னை, திருவல்லிக்கேணி, பராங்குச மந்திரத்தில் இருக்கும் நிகம

பரிமளம் ஆபீஸ் மானேஜரால் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கும் வ்யாக்யானத்தில் இருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. இதற்குப் பிறகு சூடியசீக்கிரத்தில் மேல் ரஹஸ்யங்களும் இதே மாதிரியாக அச்சிடப்பட்டு வெளியிடப்படும்.

இங்ஙனம்

பிரம்மை

சேட்லூர் ஸ்ரீநிவாஸ கண்டாவதாரன்.



ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஹயக்ரீவாய நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே வேதாந்தகுரவே நம:

ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகன் அருளிச்செய்த

## முதலாவது ரஹஸ்யம்.

# ஸ்ரீமத் ஸம்ப்ரதாய பரிசுத்தி.

## தனியன்கள்.

ஸ்ரீ நைனாராசார்யர் அருளிச்செய்தது.

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி.

ஸ்ரீப்ரும்மதந்த்ர ஸ்வதந்த்ரஸ்வாமி அருளிச்செய்தது.

ராமாநுஜதயாபாத்ரம் ஜ்ஞானவைராக்யபூஷணம்
ஸ்ரீமத்வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேசிகம்.

ஸ்ரீ பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்தது.

சீரொன்று தூப்புற் திருவேங்கட முடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியு—ளோரொன்று
தானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு.

---

கட்டளைக் கலித்துறை.

தம்பரமென் றிரங்கித் தளரா மனந் தந்தருளால்
உம்பர்தொழுந் திருமால் உகந்தேற்கும் உபாயமொன்றால்
நம்பிறவித்துயர் மாற்றிய ஞானப்பெருந்தகவோர்
சம்பிரதாயமொன்றால் சதிர்க்குநிலை சார்ந்தனமே 1

---

[பதவுரை.] தம் - தமக்கு, பரம் - பாரம், என்று - என்று நினைத்து, இரங்கி - கருணையைச்செய்து, தளரா - தளர்ச்சியையடை

ஸதாசார்ய ஸம்ப்ரதாயத்தாலே அத்யாத்ம ஶாஸ்த்ரார்த்த விஶேஷ நிர்ணயம் பண்ணவேணுமென்னுமிடம் உபநிஷத்துக்களிலும் உபப்ரும்மணங்களிலும் ப்ரஸித்தம். ஶாஸ்த்ரார்த்த நிரூபணம் பண்ணுமிடத்தில் ஶக்தியில்லாதவர்களுக்கு "உபதேஶாத் தரிம்புத்வா" என்கிறபடியே ஶாஸ்த்ரஜ்ஞ ஸம்ப்ரதாயமாத்ரமும் அபேக்ஷிதார்த்த நிர்ணயகமாம். ஸத்ஸம்ப்ரதாய ரஹிதமான ஶாஸ்த்ரத்தால் அர்த்த நிர்ணயம் துஷ்கரம். ஸஹகாரந்தானுகிலும் உபயுக்தமாகாது. அத்யந்தாதீந்த்ரிய விஷயத்தில் ஶாஸ்த்ரமூலமல்லாத ஸம்ப்ரதாயமும், ஸம்ப்ரதிபந்ந ஶாஸ்த்ர விருத்தமான ஸம்ப்ரதாயமும் ப்ரமவிப்ரலம்ப ஸம்பாவனையுண்டாகையாலே பாஹ்யதுல்யமாகையால் அவிஶ்வஸநீயம். பரஸ்பர விருத்தமாக ஸதஸ்யமும் ரஹஸ்யமுமென்று சொல்லுமவையிரண்டும் ஸ்வவாக்யத்தாலே பாதிதங்களாம். இரளிலே சொல்லுமவைகளில் சில அர்த்தங்களை ஏகாந்தத்தில் சொல்ல விதிக்கையாலே அவற்றை ரஹஸ்யங்களென்கிறது. ப்ரஜாபதிவாக்யம், முற்பட அஸுரேந்த்ரனை விரோசனனை மோஹிப்பிக்கைக்காகச் சொல்லப்பட்டு, பிற்பட தேவேந்த்ரனை பர்வக்ரமத்தாலே பரிசுத்தாத்ம விஷயத்திலே ப்ரதிஷ்டித புத்தியாக்குகிறது. உபகோஸல வைஶ்வானராதி வித்யைகளிலே, முற்பட வேத்யோபாதேயங்களைப்பற்ற ஏகதேஶோபதேஶம் க்ரமேணஶேஷ பூரணார்த்தம். ஸர்வேஶ்வரன் தானும் தானுபதேஶித்த ஜ்ஞானத்தைப் பின்னையும் "தத் வித்தி ப்ரணிபாதேன பரிப்ரஶ்நேந ஸேவயா"

---

யாத,மனம் - மனதை, தந்து - கொடுத்து, அருளால் - ஸஹஜகாருண்யத்தாலே, உம்பர்தொழும் - நித்யஸூரிகளால் ஸேவிக்கப்படுமவனை, திருமால் - ஶ்ரியபதி, உகந்து - ப்ரீதியைச்செய்து, ஏற்கும் - அங்கீகரிக்கக் கூடியதான, உபாயமொன்றால் - தனக்கொப்பில்லாத ப்ரபத்தியாகிற உபாயத்தால், நம் - நம்முடைய (அகிஞ்சனரான நம்முடைய), பிறவித்துயர் - ஜன்மத்தினால் உண்டாகிய துக்கத்தை, மாற்றிய - நீக்கினவர்களான, ஞானப்பெருந்தகவோர் - விசேஷமான ஜ்ஞானம், க்ருபை இவைகளையுடைய பூர்வாசார்யர்களுடைய, சம்பிரதாய மொன்றால் - ஒப்பற்ற ஸம்ப்ரதாயத்தினால், சதிர்க்கும் - சாதுர்யத்தை யடைந்திருக்கும், நிலை - ஸ்திதியை, சார்ந்தனம் - அடைந்தனம், ஏ - ஈற்றசை.

என்று பல ஜ்ஞானிகள் பக்கலிலே கேட்க விதித்தானிறே. இப்படி களால் ஸம்ப்ரதிபந்ந ஶாஸ்த்ர விரோதமுமன்றிக்கே, ஶாஸ்த்ர மூலத்வ ஸம்ப்ரதிபத்தியுண்டான ஸம்ப்ரதாயம் உபஜீவ்யம்.

இப்படிப்பட்ட ஸத்ஸம்ப்ரதாயத்தில் தோற்றும்விரோதம் தத்வ விஷயமாகில் தாத்பர்யபேதத்தாலே விரோத ஶாந்தியுண்டாம். அநுஷ்டான விஷயமாகில் அவ்வோ அதிகாரிக்கனு குணமாக வ்ய வஸ்திதாவ்யவஸ்தித ப்ரக்ரியையாலே விகல்பமாம். ந்யாஸோபாஸ நங்களிலே அதிகாரிபேதத்தையிட்டு வ்யவஸ்தித விகல்பமென்று பார்க்கிலும் பலஸாம்யத்தையிட்டு துல்யவிகல்பமென்று பார்க்கிலும் விரோதமில்லை.

ஸர்வலோக ஹிதமான அத்யாத்ம ஶாஸ்த்ர ஸம்ப்ரதாயத்திற்கு ப்ரதம ப்ரவர்த்தகன் ஸர்வேஶ்வரன். மற்றுள்ளாரெல்லாரும் அவன் தன்னாலேயாதல் சேதனாந்தர முகத்தாலேயாதல் மயர்வறமதிநல மருளப்பட்டு ப்ரவர்த்திப்பிக்கிறவர்கள். இப்படி அநஸூயாதி குண யுக்தராய் "ப்ரணிபத்யாபிவாத்யச" இத்யாதிகளிற்படியே ஸம்யக்ரூப ஸந்நரான அதிகாரிகளைப்பற்ற யதார்த்த தர்ஶிகளாய் யதாத்ருஷ் டார்த்தவாதிகளான வ்யாஸபோதாயனாதிகளாலே யதாதிகாரம் ப்ர வர்த்திதமான வேதாந்த ஸம்ப்ரதாயத்திற்கு இந்த யுகாரம்பத்திலே ப்ரும்மநந்த்யாதிகளுக்குப் பின்பு நம்மாழ்வார் ப்ரவர்த்தகரானார். "ப்ராப்யம் ஜ்ஞானம் ப்ராம்மணாத் க்ஷத்ரியாத் வா வைஶ்யாச் சூத் ராத் வாபி நீசாதபீக்ஷணம்" இத்யாதி ப்ரமாணபலத்தாலே "மிக்க வேதியர் வேதத்தினுட்பொருள், நிற்கப்பாடி யென்னெஞ்சுள் நிறுத் தினான்" என்கிறது உபபந்நம். வேதாந்தார்த்த வைஶத்ய ஹேது வாகையாலே பாஷாந்தரம் உபஜீவ்யம். தர்மவ்யாத துலாதாராதி வ்ருத் தாந்தங்களையும் இங்கே யனுஸந்திப்பது. "ஶூத்ரயோநாவஹம் ஜாதோ நாதோந்யத் வக்துமுத்ஸஹே" என்கிறது விஷயபேதத்தாலே பரிஹ்ருதம். மதுரகவி முதலான ஸம்ப்ரதாய பரம்பரையாலும் ப்ராதுர்பாவ விஶேஷத்தாலும் நாதமுனிகளுக்கு நம்மாழ்வாராசார்ய ரானார். இவரை ப்ரபந்நஸந்தான கூடஸ்தரையாலே ஆளவந்தார் "ஆத்யஸ்ய நঃ குலபதேঃ" என்றருளிச் செய்தார். நாதமுனிகள் தம்முடைய திருப்பேரனாரான ஆளவந்தாருக்குத் தாமுபதேசியாதே, தம்முடைய ஶிஷ்யப்ரஶிஷ்யர்களை இவருக்கு ஆகாங்க்ஷை பிறந்த

போது உபதேசியுங்கோளென்று ஆஜ்ஞாபித்தது குருபுத்ரபௌத்ராதிகளும் வித்யா ப்ரதானத்திற்கு ப்ரஶஸ்த பாத்ரங்களென்றும், ஜ்ஞான ஸந்ததியாலே முற்பட்டவர்களும் குருக்களாக ஆதரணீயரென்றும், ஆகாங்க்ஷையன்றிக்கே யிருக்கச்செய்தே சொன்னால் ஶிஷ்யபுத்தியில் அர்த்தம் ப்ரதிஷ்டிதமாகாதென்றும் தெளிவித்தபடி. மணக்கால் நம்பி ஆளவந்தாருக்கு நெடுநாள் பச்சையிட்டு ஒரு விரகாலே ஆகாங்க்ஷையுண்டாக்கி உபதேசித்தது ஆசார்ய குலத்திற்குத் தாமொரு கிஞ்சித்காரம் பண்ணுகையிலும் ஆசார்ய நியோகத்தைக் கடுகத் தலைக்கட்டுகையிலும் உண்டானத்வரையாலும் சிர கால பரீக்ஷாதிகள் வேண்டாதபடி "போதநஞ்ச முஹு: க்ரமாத்" என்கிற யுகதர்மாநுஸாரத்தாலும் உபபந்நம். ஆளவந்தார் தாம் நாதமுனிகளை முன்னிட்டு ஸ்தோத்ரம் பண்ணித்தும் சரணம் புக்கதுவும் தம்முடைய ஆசார்யருக்கு இது ப்ரியதமமென்றும் தமக்கு ஆசார்யவத்தை முதலான ஸகல ஸம்பத்துக்களுக்கும் நாதமுனி வம்சத்தில் பிறவியென்றும் தோற்றுகைக்காகவும், ஆசார்ய விஷயத்திற்போலே பரமாசார்ய விஷயத்திலும் க்ருதஜ்ஞதாதிகள் வேணுமென்கைக்காகவும் என்றறியப்படும். ஆசார்ய பங்க்தியில் சிலரை க்ரந்தங்களிலே வ்யபதேசித்து அவர்களையும் மற்றுமுள்ளவர்களையும் அநுஸந்திப்பார்கள். ஆளவந்தாருடைய நியோகத்தாலே ஸ்ரீபாஷ்யகாரரை யங்கீகரித்த பூர்ணரான பெரிய நம்பி இவரைத் தமக்கு ஸப்ரஹ்மசாரிகளான திருக்கோட்டியூர் நம்பி பக்கலிலே அர்த்தஶிக்ஷை பண்ணவும், திருமாலை யாண்டான் பக்கலிலே திருவாய்மொழி கேட்கவும், ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் பக்கலிலே நல்வார்த்தை கேட்கவும் நியோகித்ததும் "பஹுப்ய: ஶ்ரோதவ்யம் பஹுதா ஶ்ரோதவ்யம்", "ஜ்ஞான வ்ருத்தா மயா ராஜந் பஹவ: பர்யுபாஸிதா:" இத்யாதிகளையும் ஶுகாதி வ்ருத்தாந்தங்களையும் பார்த்து ஶிஷ்யபூதரை பஹுமுகமாகத் திருத்த வேண்டுமென்கிற அபிஸந்தியாலே உபபந்நம். இப்படி ஆசார்யாபிமத விஷயத்தில் ஆசார்யாநுஜ்ஞையாலே அபேக்ஷித ஜ்ஞானோபஜீவனம் பண்ணுமது ஶாஸ்த்ரார்த்தமென்னுமிடம் அந்திம தஶாவதியாக அத்யந்தாவஹிதராய்க்கொண்டு ஸதாசாராநுபாலனம் பண்ணின ஸ்ரீபாஷ்யகாரருடைய அநுஷ்டாநத்

தாலே ஸித்தம். அத்யாத்ம விஷயத்தில் ப்ரதாந ப்ரதாநாம்சங்களை ஒருவர்க்குப் பலராக உபதேசிக்க வேதாந்தங்களில் பலவிடங்களில் கண்டோம். ஓராசார்யன் பக்கலிலே க்ருத்ஸ்நோபதேசம் மைத்ரேயாதிகளுக்குப்போலே சிலருக்குண்டாம். ப்ரதான ஶ்ருதத்தினுடைய ப்ரதிஷ்டார்த்தமாகப் பலருபதேஶித்தால் "அல்பம் வா பஹு வா யஸ்ய ஶ்ருதஸ்யோபகரோதி யஃ தமபீஹ குரும் வித்யாத் ச்ருதோபக்ரியயா தயா" என்கிறபடியே அவர்கள் பக்கலிலும் ஆசார்ய ப்ரதிபத்திபண்ண ப்ராப்தம். அவ்யவஹிதமோக்ஷோபாயவ்யவஸாயம் பிறப்பிக்கை ப்ரதாநாசார்ய க்ருத்யம். இது கலங்காதபடி பண்ணுகையும், பரிகரபூர்த்தி யுண்டாக்குகையும் ஆசார்யாபிமத ஶிக்ஷகாந்தரக்ருத்யம். இப்படிப்பட்ட ஆசார்யஸம்பந்தத்தை யுண்டாக்கினவர்களும், ப்ரபந்த முகங்களாலே பரம்பரையா உபகரித்தவர்களும் ஆதரணீயர். இவர்களில் ப்ரதாநதமன் ஸர்வப்ரேரகனான ஶ்ரிய:பதி. இவனொருவனுமே தனக்கொரு ஆசார்யனில்லாத பரமாசார்யன்.

ஸ்ரீபாஷ்யகாரருடைய ஶிஷ்ய ஸம்ப்ரதாயங்களில் ஒன்றிலும் அர்த்தவிரோதமில்லை, வாக்யயோஜநாபேதமேயுள்ளது. தேஶகாலாவஸ்தா விஶேஷங்களாலே வரும் அநுஷ்டான வைஷம்யம் ஶாஸ்த்ராநுமதம். சோராபராதத்தை மாண்டவ்யன் பக்கலாரோபித்தாற்போலே ஸ்வேச்சைக்கநுகுணமாக அநிபுணர் சொல்லுமது வக்தாக்களுக்கே தோஷமாம். திருமந்த்ரத்தில் பதார்த்த வாக்யார்த்தங்களெல்லாம் மூலபூதநிருக்தாதி வாக்ய விஶேஷங்களாலே வந்தவை. இதில் பதத்ரயத்திலுமாகவாதல், ப்ரதமபதத்திலேயாதல், ப்ரதமாக்ஷரத்திலேயாதல் ஸங்க்ஷேபவிஸ்தார க்ரமத்தாலே ஶப்தார்த்தஸ்வபாவங்களைக் கொண்டும், அர்த்தபஞ்சகாநுஸந்தானம் பண்ணுமதுவும் அந்யோந்ய விருத்தமன்று. இப்படி ப்ரதமத்விதீயாக்ஷரங்களாலே ஆர்த்தமாகவாதல், ஶாப்தமாகவாதல் ஶரண்ய ஸஹதர்மசாரிணீ ப்ரதிபாதநம் பண்ணுமதுவும் அவ்வோ வாக்ய விஶேஷமூலம். மத்யமாக்ஷரம் பத்நீபரமென்னும் நிர்வாஹத்தில் விஶேஷோபாதான பலத்தாலே அவதாரணம் ஆர்த்தஸித்தம். இந்த அவதாரணத்தாலே ஶரீராத்மபாவம் ஸித்திக்கிறதென்பார்க்கு ஶேஷத்வாயோகவ்யவச்சேதத்திலே தாத்பர்யங்கொள்ளலாம். "மகாரார்த்தோ ஜீவ:" இத்யாதிகளிற்படியே த்ருதீயாக்ஷரம் ஜீவஜாதீய ஸர்வபரமென்பார்க்குமிதில் ஸ்வாநுஸந்தாநமார்த்தமென்னவேணும். "அகாரார்த்தாயைவ

ஸ்வமஹம்" என்று விசேஷித்து வ்யாக்யானம் பண்ணினவர்களுக்கும் இவ்வநுஸந்தானம் ஸர்வ ஜீவஸாதாரணுகார விஷயம். பகவச்சேஷத்வம் தோற்றுமிடமெல்லாம் பாகவத சேஷத்வ பர்யந்தமாக அநுஸந்திக்க ப்ராப்தமாயிருக்க ஔசித்யாதிசயத்தாலே மத்யமபதத்திலே இத்தை யனுஸந்திக்குமது உபபந்நம். ப்ரதமத்விதீயசதுர்த்திகளுக்கு ஏகார்த்தத்வ பிந்நார்த்தத்வங்களும் ப்ரமாணுநுகுண வாக்யார்த்த விவக்ஷாபேதத்தாலே சொன்னவை. த்வயத்தில் பூர்வாபர ஸ்ரீமச்சப்தங்களிலும், பூர்வாபர நாராயண சப்தங்களிலும் சில ஆகார விசேஷங்களைப் பிரித்தநுஸந்திக்குமது உபாய பலதசைகளுக்கு உபயுக்தாம்ச நிஷ்கர்ஷம் பண்ணினபடி. சரணங்களை உபாயமென்கிறதுக்கு சரணவிசிஷ்ட வசீகார்யன் பக்கலிலே தாத்பர்யமாகையாலே ஸித்தோபாயபேதமும் ஸாத்யோபாயபாதமும் வாராது. நமஸ்ஸு நாநார்த்தமாக அஹிர்புத்ந்ய ஸம்ஹிதாதிகளிலே நிருக்தமாகையாலே ப்ரதமத்விதீயரஹஸ்யங்களில் மத்யம சரமபதங்களுக்கு வாக்யார்த்தாநுகுணமாக அர்த்தபேதங்கொள்ளலாம். த்விதீயத்ருதீய ரஹஸ்யங்களில் கிடக்கிற சரணசப்தம் உபாய பரமானதடியாக வசீகாரோபாயத்துக்கு சிலர் பண்ணும் திரஸ்காரமெல்லாம் ஸித்தோபாய ப்ராதான்யபரம். ஸ்வாநுஸந்தாநபரமாயும், விதிபரமாயும் நிற்கிற ஆக்யாதங்களில் ஆவ்ருத்திக்கு ஜ்ஞாபகமில்லாமையாலும் அநாவ்ருத்திக்குக் கண்டோக்தி யுண்டாகையாலும் வர்த்தமான வ்யபதேசம் அநுஷ்டான காலாபிப்ராயம். ப்ரபத்திக்கு யாவஜ்ஜீவாநுவ்ருத்தி சொல்லுவார்க்கும் "த்வயமர்த்தாநுஸந்தாநேந ஸஹ ஸதைவம் வக்தா" இத்யாதிகளிற் சொன்ன ஸுகாஸிகையிலே தாத்பர்யங் கொள்ளலாம். "ந்யாஸঃ பஞ்சாங்கஸம்யுதঃ" என்று சொன்ன ப்ரபத்யங்கங்களிலே சிலர் கதிபயாநாதரம் பண்ணுமது அங்கியினுடைய வைபவார்த்தம். விசேஷித்து கதிபயாங்கோபாதானம் பண்ணுமதுவும் அங்காந்தரங்களிற்காட்டில் இவ்வங்கங்களுடைய ப்ராசஸ்த்யார்த்தம். சரமச்லோகத்தில் விதிக்கிற ப்ரபத்தி ஸகல பலஸாதனமாகையாலே அங்கமாகவும், ஸ்வதந்த்ரமாகவும் வ்யாக்யானம்பண்ணின பாஷ்யகத்யாதிகளுக்கு விரோதமில்லை. ஸர்வ தர்மசப்தத்தில் ஸங்குசிதாஸங்குசித வ்ருத்திகளைக் கொள்ளுமவர்களுக்கு பரபக்ஷத்திற்போலே ஸ்வதர்ம ஸ்வரூபத்யாக விதி விவக்ஷையில்லாமையாலே ஸ்வதந்த்ராஜ்ஞாநுபாலன விரோதமில்லை. பரித்யஜ்ய சப்தத்திலும், ஏகசப்தத்திலும் மூலப்ரமாணுநுகுணமாகச் சொல்லும்

ப்ல அர்த்தங்களிலும், பரஸ்பர விரோதமில்லை. அவற்றில் புநருக்தி வாராதபடி அநுஸந்திக்குமதுவே வேண்டுவது. ஶரண்யனுக்கு ப்ரபத்தி கர்மத்வத்தையும், மோக்ஷகர்த்ருத்வத்தையும் ப்ரதிபாதிக்கிற 'மாமஹம்' என்கிற பதங்களிலே பரஸ்வீகாரோபயுக்தமான ஸௌலப்யமும், ஸர்வோபகாரோபயுக்தமான பரத்வமும் அநுஸந்திக்குமிடத்தில் அபேக்ஷித விஶேஷங்களைப் பிரித்து அநுஸந்திக்குமது ஶேஷ வ்யவச்சேதார்த்தமன்று. 'வ்ரஜ' என்றும், 'த்வா' என்றும் அர்ஜுநனை யொருவனைக் குறித்துச் சொன்னலும் தாத்பர்ய விஶேஷத்தாலே இது ப்ரபத்யதிகாரிகளெல்லாருக்கும் வரும். ஸர்வபாபமோக்ஷ வசனத்தில் புத்தி பூர்வோத்தராகத்தையும் கூட்டுவார்க்கு ஶரண்யாபிப்ராயமூல புநஃ ப்ரபதனாதி முகத்தாலே அவைகளுக்கு விநாஶம் விவக்ஷிதமாகையால் ஶாஸ்த்ர விரோதமில்லை. 'மோக்ஷயிஷ்யாமி' என்கிற ஸங்கல்பத்தில் பலத்தை ப்ராரப்த கர்மாவஸாந காலத்திலே என்றவர்களுக்கும் ப்ரபத்தி பண்ணுகிறவன் கோலின காலத்திலே என்றவர்களுக்கும் ஆர்த்தியில் தாரதம்யத்திற் கீடாக பலாநுபவத்தாலேயாதல், ப்ரபத்தி வைபவத்தாலேயாதல் ப்ராரப்த கர்மாவஸாந காலத்திலே மோக்ஷமும் துல்யம். அர்ஜுனனுக்கு ஶோக நிமித்தம் வேறேயாகிலும் "மாஶுசஸ் ஸம்பதம்தைவீம்" என்கிற இடத்திற்போலே "மோக்ஷயிஷ்யாமி மாஶுசஃ" என்கிற இடத்திலும் ப்ரகரணாநுகுண நிமித்த விஶேஷாநுஸந்தாநமுசிதம். மற்றுமிப்படி வேதாந்த ஸித்தங்களான தத்வஹித புருஷார்த்தங்களில் பரஸ்பர விரோதமும் பூர்வாபர விரோதமும் இல்லாத ஶுத்த ஸம்ப்ரதாய க்ரமத்தை ஸங்க்ரஹித்தனம். "ஶுவ்யாஹ்ருதாநி மஹதாம்" இத்யாதிகளையுமிங்கே ஸங்க்ரஹித்துக் கொள்வது.

அகவல்

கடலமுதத்தைக் கடந்து சேர்த்த—திருமாலடி காட்டிய நம்
தேசிகர் தந்நிலைப்பற்றிச் சேர்ந்தோமே 2

---

[ப - ரை.] கடல் - ஸமுத்திரத்தை, கடைந்து - மதனஞ்செய்து, அமுதத்தை - அம்ருதத்தை, சேர்த்த - ஒன்று சேர்த்தவனாகிய, திருமால் - ஶ்ரிய:பதியான ஸர்வேஶ்வரனுடைய, அடி - திருவடிகளை, காட்டிய - உபாயோபேயத்வேந காட்டிக் கொடுத்த, நம் தேசிகர் தம் - நம் பூர்வாசார்யர்களினுடைய, நிலை - ஸ்திதியை, பற்றி - அவலம்பித்து, சேர்ந்தோம் - நாமடைந்தோம். 2

ஆஸர்வஜ்ஞாதஸ்மதாசார்ய பங்க்தே
ரப்ரத்யூஹம் ஸத்பதம் ஸ்தாபயந்தீ
ஸைஷா நித்யம் ஸம்ப்ரதாயஸ்ய ஶுத்திஃ
ஶ்ரத்தாதவ்யா சாதகந்யாய நிஷ்டைஃ

இதி கவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய

ஸ்ரீமத்வேங்கடநாதஸ்ய ஸ்ரீமத் வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு

ஸ்ரீமத் ஸம்ப்ரதாயபரிசுத்திஸ் ஸம்பூர்ணு.

கவிதார்க்கிகஸிம்ஹாய கல்யாணகுணஶாலிநே

ஸ்ரீமதே வேங்கடேஶாய வேதாந்தகுரவே நமஃ

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

---

[ப - ரை.] ஆஸர்வஜ்ஞாத் - எல்லாந் தெரிந்தவனாகிய பகவான் ஆரம்பித்து, அஸ்மதாசார்யபங்க்தே:—நம்முடைய ஆசார்யருடைய வரிசையின், ஸத்பதம் - நல்ல மார்க்கத்தை, அப்ரத்யூஹம் - ஒரு விதத் தோஷமுமில்லாமலிருக்கும்படி, ஸ்தாபயந்தீ - ஸ்தாபிக்கிற, ஸைஷா - அப்படிப்பட்ட இந்த, ஸம்ப்ரதாயஸ்ய - ஸம்ப்ரதாயத்தினுடைய, ஶுத்திஃ - ஶுத்தி, சாதகந்யாய நிஷ்டைஃ - சாதக பக்ஷியின் ந்யாயத்தில் நிஷ்டையையுடைய பரமைகாந்திகளினால், நித்யம் - எப்பொழுதும், ஶ்ரத்தாதவ்யா - விஶ்வாஸம் செய்யத்தக்கது.

ஸ்ரீ:

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

## இரண்டாவது ஹரஸ்யம்.

# ஸ்ரீமத் தத்வபதவீ.

ப்ரஸாதாத் தேஶிகேந்த்ராணாம் பராவரவிபாகவித்
ப்ரபந்ந: பரமாத்மாநம் ப்ராப்நோதி பரமம் பதம்.

ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே பராவரதத்வஜ்ஞானம் பிறந்து ஸர்வேஶ்வரன் திருவடிகளை உபாயோபேயங்களாகப் பற்றி உஜ்ஜீவிக்கவேண்டும். பரதத்வமாவது ஸ்வவ்யதிரிக்த வஸ்துக்களெல்லாத்துக்கும் தாரகனுமாய், நியந்தாவுமாய், ஶேஷியுமான ஶ்ரிய:பதி. இவன் ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனாய், ஸர்வஶக்தியாய், பரமகாருணிகனாய், ஸர்வஶரண்யனாய், பரமோதாரனாய், மோக்ஷப்ரதனாய், முக்தப்ராப்யனாய், பரவ்யூஹாதி பஞ்சப்ரகார ஶுபாஶ்ரய திவ்யமங்கள விக்ரஹ விஶிஷ்டனாயிருக்கும். இவனை யொழிந்தவை அவரதத்வம். இது சேதனமென்றும், அசேதனமென்றும் இரண்டு வகையாயிருக்கும். சேதனமான அவரதத்வம் பரிச்சின்னமான அஹமர்த்தம். இதற்கு ஜ்ஞாத்ருத்வ கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் பராயத்தங்களாயிருக்கும். இது பத்தமுக்த நித்ய ரூபத்தாலே த்ரிவிதம். பத்தராவார் ஸம்ஸரிக்குமவர்கள். முக்தராவார் ஸம்ஸாரங் கழிந்தவர்கள். நித்யராவார் ஒரு காலத்திலும் ஸம்ஸாரமில்லாத நித்யஸூரிகள். அசேதனமாவது அறிவில்லாத வஸ்து. அசேதன த்ரவ்யம் த்ரிகுணமென்றும், காலமென்றும், ஶுத்த ஸத்வமென்றும், தர்மபூதஜ்ஞானமென்றும் சதுர்விதமாயிருக்கும். த்ரிகுணமாவது ஸத்வாதி குணத்ரயாஶ்ரயமான த்ரவ்யம். இது ப்ராக்ருதி விக்ருதி விபாகத்

---

[ப - ரை.] தேஶிகேந்த்ராணாம் - ஆசார்யர்களுடைய, ப்ரஸாதாத் - அனுக்ரஹத்தினாலே, பராவரவிபாகவித் - பரதத்வம், அவரதத்வம், இவைகளின் பிரிவைத் தெரிந்துகொண்டவனாய், பரமாத்மாநம் - உயர்ந்த தத்வமாகிற ஶ்ரிய:பதியை, ப்ரபந்ந: - ப்ரபத்தி செய்தவன், பரமம் பதம் - பரமபதத்தை, ப்ராப்நோதி - அடைகிறான்.

தாலே இருபத்துநாலு வகையாய், பகவல் லீலார்த்தமாக க்ஷேத்ர ஜ்ஞருக்கு காயகரணாதிரூபேண பரிணமித்து பகவத் ஸ்வரூப திரோதானதிகளைப் பண்ணும். காலமானது க்ஷணாதி விபாகத்தை யுடைத்தாய் ஸர்வகர்த்தாவான ஈச்வரனாலே ஸஹகாரியாக ஸ்வீக்ருத மாயிருக்கும். சுத்த ஸத்வமாவது ரஜஸ்தமஸ்ஸுக்களன்றிக்கே ஸத்வகுணாச்ரயமான த்ரவ்யம். இது ஈச்வரனுக்கும் நித்யருக்கும் முக்தருக்கும் விக்ரஹாதிரூபேண விசித்ரமாயிருக்கும். தர்மபூத ஜ்ஞானமானது பராவராத்மாக்களுக்கு ஸ்வாத்மாவையும் ஸ்வவ்ய திரிக்த வஸ்துக்களையும் ப்ரகாசிப்பிக்கவற்றான ஜ்ஞானம். இந்த ஜ்ஞானத்தாலே ஆத்மாக்களுக்கு ஜ்ஞாத்ருத்வ கர்த்ருத்வ போக்த்ருத் வங்கள் உண்டாகின்றன. பத்தருக்கு நிஷித்தகாம்யகர்த்ருத்வம் ஸம்ஸார ஹேது. தத்வஜ்ஞானமூல நிவ்ருத்திதர்ம கர்த்ருத்வம் மோக்ஷ ஹேது. பத்தன் முன்பு பண்ணின பந்தகங்களுக்கெல்லாம் தன்னதிகாரானுகுணமாக ப்ரபத்தியாதி ப்ராயச்சித்தம் பண்ணி மேலபராதம் பண்ணாதே ப்ராரப்த கர்மத்தையும் ஒரு வழியாலே கழித்து முக்தனாம்.

குறள் வெண்பா.

முத்திக்கருள்கூட மூன்றைத்தெளி முன்னம்
இத்திக்காலேற்குமிதம். 3

இதி கவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய

ஸ்ரீமத்வேங்கடநாதஸ்ய ஸ்ரீமத் வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு

ஸ்ரீமத் தத்வபதவீ ஸம்பூர்ணா.

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

---

[ப - ரை.] முத்திக்கு - மோக்ஷத்திற்குக் காரணமாகிய, அருள் - பகவானுடைய க்ருபையை, கூட - சிரஸாவஹிக்க, முன்னம் - முத லில், மூன்றை - மூன்று தத்வங்களை, தெளி - அறிந்துகொள், இத்திக்கால் - இந்த வழியாக, இதம் - உபாயம், ஏற்கும் - அனுரூப மாக ப்ராப்தமாகும். 3

ஸ்ரீ:

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

## மூன்றாவது ரஹஸ்யம்.

# ஸ்ரீமத் ரஹஸ்ய பதவீ.

அநாதிகாலம் ஸம்ஸரித்துப்போந்த ஜீவாத்மாக்களுடைய உஜ்ஜீவநார்த்தமாக அத்யாத்ம சாஸ்த்ரங்கள் தத்வ ஹித புருஷார்த்தங்களை ப்ரதிபாதிக்கும். அவற்றை ஸங்க்ரஹேண ரஹஸ்யத்ரயம் ப்ரகாஶிப்பிக்கும். இவற்றில் திருமந்த்ரம் ஸர்வஸங்க்ரஹம். இது தான் மூன்று பதமாய் எட்டுத் திருவக்ஷரமாயிருக்கும். இதில் ப்ரதமபதமான ப்ரணவம் ஸாரதமஸங்க்ரஹம். இது மூன்று பதமாய் மூன்றக்ஷரமாயிருக்கும். இதில் ப்ரதமாக்ஷரம் ஸர்வகாரணபூதனாய் ஸர்வரக்ஷகனாய் நித்ய நிருபாதிக ஶேஷித்வ ப்ரதிஸம்பந்தியான ஸ்ரீய:பதியைச் சொல்லுகிறது. இதில் சதுர்த்தி ஶேஷத்வமாகிற ஸம்பந்தத்தைக் காட்டுகிறது. மத்யமாக்ஷரம் இஸ்ஸம்பந்தத்தை மற்றொருவரோடு அவக்கற நியமிக்கிறது. த்ருதீயாக்ஷரம் இஸ்ஸம்பந்தத்திற்காஶ்ரயனாய் ரக்ஷணீயனாய் ஜ்ஞாநாநந்த ஸ்வரூபகுணனாய் அணுவாய் தேஹாதி விலக்ஷணனான ஜீவாத்மாவைச் சொல்லுகிறது ஆக இப்ரணவத்தால் "கண்ணபுரமொன்றுடையானுக்கடியேனொருவர்க்குரியேனோ" என்கிறபடியே இஜ்ஜீவாத்மா பகவதநந்யார்ஹ ஶேஷபூதனென்றதாயிற்று. மத்யம பதமான நமஸ்ஸு இரண்டக்ஷரமாய் இரண்டு பதமாய் நானெனக்குரியேனல்லேன், என் கார்யத்திற்கு நிரபேக்ஷ ஸ்வதந்த்ரனுமல்லேன் என்கிறது. இங்கே பாகவதஶேஷத்வம் பலிதம். இந்த நமஸ்ஸுக்குச் சரணாகதியிலும் தாத்பர்யம். அநிஷ்ட நிவ்ருத்தியை ப்ரார்த்திக்கிறதாகவுமாம். இப்படி நமஸ்ஸு தன்னிலே தத்வ ஹித புருஷார்த்த ப்ரகாஶநமுண்டு. நாராயண ஶப்தம் நாரங்களுக்கு அயநமென்றும் நாரங்களை அயநமாகவுடையவனென்றும் ஸர்வாதாரத்வாதி விஶிஷ்டனான ஸ்ரீய:பதியைச் சொல்லுகிறது. இதில் சதுர்த்தி தாதர்த்யத்தை முன்னிட்டுக்கொண்டு அதின் பலமான கைங்கர்யத்தைக் காட்டுகிறது. இத்தால் "ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழு

விலா வடிமை செய்யவேண்டு நாம்" என்றதாயிற்று. "அகாரார்த்தாயைவ" என்கிற ஶ்லோகத்தை இங்கே அநுஸந்திப்பது.

இதி திருமந்த்ராதிகார: ஸம்பூர்ண:

இப்படி திருமந்த்ரத்தில் ஸங்க்ரஹீதங்களான தத்வஹித புருஷார்த்தங்களை விஶதமாக்குகிறது த்வயம். இதில் பூர்வகண்டம் ஒரு வாக்யமாய் உபாயபரம். உத்தரகண்டம் இரண்டு வாக்யமாய் உபேயபரம். இவை ஒரோன்றும் மூன்று பதமாய் இருக்கும். ப்ரதமகண்டத்தில் ப்ரதமபதம் மூன்று பதங்கூட ஸமஸ்த பதமாய் இருக்கும். இதில் ஸ்ரீமச்சப்தம் ஸர்வருக்கும் ஆஶ்ரயணீயையாய் "அகலகில்லேன்" என்கிறபடியே தன்னை ஆஶ்ரயித்திருக்கிற பெரிய பிராட்டியாரோடு பிரிவற்றவனென்கிறது. நாராயணஶப்தம் "நிகரில் புகழாய்" இத்யாதிகளிற்சொன்ன வாத்ஸல்ய ஸ்வாமித்வ ஸௌஶீல்ய ஸௌலப்யாதிகளை யுடையவனை ஸர்வேஶ்வரனைச் சொல்லுகிறது. சரணசப்தம் ஶரண்யவிஷயத்தில் க்ருபோத்தம்பநாதிகளுக்காக தாஸபூதன் பற்றும் துறையான திருவடிகளைக் காட்டுகிறது. ஶரணம் என்கிற பதம் திருவடிகளுடைய உபாயபாவத்தைச் சொல்லுகிறது. ப்ரபத்யே என்கிற பதம் அகிஞ்சனாதிகாரி ஶரண்யன் திருவடிகளை உபாயமாகக்கொண்டு மஹாவிஶ்வாஸாதி விஶிஷ்டபரந்யாஸம் பண்ணுகிறபடியை ப்ரகாஶிப்பிக்கிறது. ஸ்ரீமதே என்கிற பதம் ப்ராபகனான நாராயணன் ப்ராப்யனுய்க்கொண்டு கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியாம்போது பத்நீவிஶிஷ்டனா யிருக்கும்படியைக் காட்டுகிறது. இங்குற்ற நாராயணஶப்தம் ஸர்வப்ரகார விஶிஷ்டனுய்க் கொண்டு நிரதிஶய போக்யனான ஸர்வஶேஷியை ப்ரதிபாதிக்கிறது. இதின்சதுர்த்தியிலும்திருமந்த்ரத்தில் போலே கைங்கர்ய ப்ரார்த்தனையைக் கண்டுகொள்வது. இக்கைங்கர்யம் ஸர்வவிரோதிரஹிதமான படியை இந்நமஸ்ஸு கணிஶிக்கிறது. ஸ்ரீமானான நாராயணன் திருவடிகளில் களையற்ற நித்யகைங்கர்யம் பெறுகைக்கு ஸ்ரீமானான நாராயணன் திருவடிகளிரண்டையும் ஶரணமாகப் பற்றுகிறேனென்று இதில் திரண்டபொருள்.

இதி த்வயாதிகார: ஸம்பூர்ண:

இப்படித் திருமந்த்ரத்திலும் த்வயத்திலும் ப்ரகாஶித்த உபாயத்துக்கு அகிஞ்சநாதிகாரித்வ நிரபேக்ஷத்வதிகளைக் காட்டிக்கொண்டு விதிமுகத்தாலே உபப்ரும்ஹணம் பண்ணுகிறது சரமஶ்லோகம்.

இது தான் மூன்று வாக்யமாய் பன்னிரண்டு பதமாய் இருக்கும். இப்படி ரஹஸ்யத்ரயம் உத்தரோத்தரம் பதங்களிரட்டிப்பாய் விஶதீகரணமாய் இருக்கும். இச்ச்லோகத்தில் ப்ரதமவாக்யம் உபாயவிதாயகம். மத்யமவாக்யம் பலப்ரதிபாதகம். உத்தர வாக்யம் க்ருதக்ருத்யத்வாதிதத்பரம். ஸர்வ தர்மங்களையும் விட்டு என்கிற இரண்டு பதங்களாலே "நின்னிலங்கு பாதமன்றி மற்றோர்பற்றிலேனெம்மீசனே" என்கிறபடியே அபிமத ஸித்திக்கு உபாயாந்தரமற்றிருக்கிற அதிகாரி விஶேஷத்தையாதல் ப்ரபத்தியினுடைய தர்மாந்தரநைரபேக்ஷ்யாதிகளையாதல் சொல்லுகிறது. என்னை யொருவனை யென்கிற இரண்டு பதங்களாலே ஸௌலப்யாதி குணவிஶிஷ்டமுமாய் ப்ரதாநோபாயத்வ நிரபேக்ஷத்வ ஸர்வபலப்ரதத்வாதிவிஶிஷ்டமுமான ஸநாதன தர்மத்தைக் காட்டுகிறது. ஶரணமாகப் பற்று என்கிற இரண்டு பதங்களாலே மஹா விஶ்வாஸாதி விஶிஷ்டபரந்யாஸத்தை விதிக்கிறது. நானுன்னை என்கிற இரண்டு பதங்களாலே பரஸ்வீகாரம் பண்ணின ஸர்வஶக்தியையும் ந்யஸ்தபரனுன சாதக வ்ருத்தியையும் சொல்லுகிறது. எல்லாப் பாபங்களினின்றும் விடுவிக்கக் கடவேன் என்கிற இரண்டு பதங்களாலே கைங்கர்ய விரோதிகளை நிஶ்ஶேஷமாகக் கழிக்கும்படியைச் சொல்லுகிறது. ஶோகிக்கவேண்டாம் என்கிற விரண்டு பதங்களாலே புகலற்றுத் தளும்பின பூர்வதசையை விலக்கி, "நிஸ்ஸம்ஶயஸ் ஸுகமாஸ்வ" என்றருளிச்செய்த உத்தர தஶையை உபலக்ஷிக்கிறது. த்வயத்தில் பூர்வோத்தர கண்டங்களுக்கு இதில் பூர்வோத்தரார்த்தங்கள் சேர்த்தியாகின்றன.

இதி சரமச்லோகாதிகார: ஸம்பூர்ண:.

குறள் வெண்பா.

மூன்றிலொரு மூன்று மூவிரண்டு முன்னான்குந்
தோன்றத் தொலையுந் துயர் 4

இதி தத்வத்ரயஸ்யைஷா ரஹஸ்யத்ரிதயஸ்ய ச
பதவீ வேங்கடேஶேந ப்ரத்யக் ப்ராசீ ப்ரதர்ஶிதா

---

[ப - ரை.] மூன்றில் - ரஹஸ்யத்ரயத்தில், ஒரு - அத்விதீயமான, மூன்றும் - மூன்று பதங்களடங்கிய திருமந்த்ரமும், மூவிரண்டும் - ஆறு பதங்களையுடைய த்வயமும், முன்னான்கும் - பன்னிரண்டு பதங்களையுடைய சரமச்லோகமும், தோன்ற - அர்த்தத்துடன் ப்ரகாசிக்க, துயர் - துக்கங்கள், தொலையும் - நசித்துவிடும். 4

ஸ்ரீரங்கத்விரதவ்ருஷாத்ரிபூர்வகேஷு
ஸ்தாநேஷு ஸ்திரவிபவா பவத் ஸபர்யா
ஆகல்பம் வரத விதூதவைரிபக்ஷா
பூயஸ்யா பவதநுகம்பயைவ பூயாத்

இதி கவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய
ஸ்ரீமத்வேங்கடநாதஸ்ய ஸ்ரீமத் வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
ஸ்ரீமத் ரஹஸ்ய பதவீ ஸம்பூர்ணா.

---

[ப - ரை.] ஏஷா - இந்த, தத்வத்ரயஸ்ய - சித், அசித், ஈச்வரன் ஆகிய மூன்று தத்வங்களினுடையவும், ரஹஸ்யத்ரிதயஸ்யச - திருமந்த்ரம், த்வயம், சரம ச்லோகங்களாகிற மூன்று ரஹஸ்யங்களினுடையவும், ப்ரத்யக்ப்ராசீ - கிழக்குமேற்காக இருக்கிற, அன்றிக்கே ப்ரத்யக் என்கிற ஜீவாத்மாவை அடைவதற்குக் காரணமாயிருக்கிற, பதவீ - மார்க்கமானது, வேங்கடேசேந - வேங்கடேசனாகிற ஸ்ரீநிவாஸனால், இதி - இந்த ப்ரகாரம், ப்ரதர்சிதா - காண்பிக்கப்பட்டது.

[ப - ரை.] வரத - பக்தர்களுக்கு அபீஷ்டங்களைக் கொடுக்கும் பகவானே, ஸ்ரீரங்க - ஸ்ரீரங்கம், த்விரதவ்ருஷாத்ரி - ஹஸ்திகிரி, வேங்கடாசலம், பூர்வகேஷு - இவை முதலான, ஸ்தாநேஷு - உகந்தருளிய திவ்ய தேசங்களில், பவத்ஸபர்யா - உம்முடைய திருவாராதனம், பூயஸ்யா - அதிகமான, பவதநுகம்பயைவ - உம்முடைய க்ருபையினாலேயே, ஆகல்பம் - கல்பகாலம் வரையிலும், விதூத - போக்கடிக்கப்பட்ட, வைரிபக்ஷா - சத்ருக்களினுடைய பக்ஷத்தை உடையதாகவும், ஸ்திரவிபவா - அழிவில்லாத ஐச்வர்யங்களோடு கூடினதாகவும், பூயாத் - இருக்கவேண்டும்.

ஸ்ரீ:

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

## நாலாவது ரஹஸ்யம்.

# ஸ்ரீமத் தத்வ நவநீதம்.

நேரிசை வெண்பா.

*உயிரு முடலு முடலாக வோங்கித்*
*தயிர்வெண்ணெய் தாரணியோ டுண்டான்—பயிரில்*
*களைபோ லசுரரைக் காய்ந்தான்றன் கையில்*
*வளைபோ லெம்மாசிரியர் வாக்கு* 5

ஸம்ஸ்க்ருத த்ராவிட ஶ்ருதி ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களில் சொல்லுகிற தத்வஜ்ஞான பூர்வகமாக மோக்ஷோபாயானுஷ்டானம் வேண்டுமாகையாலே, முமுக்ஷுவுக்கு விஶேஷித்தறிய வேண்டும் சிதசிதீஶ்வர தத்வங்களை போக்தாவென்றும், போக்யமென்றும், ப்ரேரிதாவென்றும் உபநிஷத்துச் சொல்லிற்று. போக்தாவாகையாவது போகத்தை யுடையவனாகை. இது ஸர்வேஶ்வரனுக்கும் பொதுவாயிருக்க அவனை ப்ரேரிதாவென்று பிரியச் சொல்லுகையாலே ஸர்வப்ரேரகத்வமன்றிக்கே பராதீன போகனான ஜீவனை இங்கு போக்தா வென்கிறது. 'அதிஷ்டானம் ததா கர்த்தா' என்கிறவிடத்தில் கர்த்ருஶப்தமும் பராதீன கர்த்தாவைச் சொல்லுகிறது. சிதசிதீஶ்வரர்க

---

[ப - ரை.] எம்மாசிரியர் - நம் பூர்வாசார்யர்களுடைய, வாக்கு - ஸ்ரீஸூக்தி, உயிரும் - ஜீவாத்மாக்களும், உடலும் - அவைகளின் சரீரங்களும், உடலாக - தனக்குச் சரீரமாயிருக்கும்படி, ஓங்கி - தான் ஶேஷியாய் ஸர்வோத்க்ருஷ்டனாய் நின்று, தயிர் வெண்ணெய் - ஆய்ப்பாடியில் தயிர், வெண்ணெய் முதலியவைகளை, தாரணியோடு - இந்தப் பூமியுடன், உண்டான் - அமுது செய்தவனாயும், பயிரில் - ஸஸ்யத்தில், களைபோல் - (அந்தப் பயிருக்கு விரோதிகளாயிருக்கும்) களையைப் போல, அசுரரை - அஸுரர்களை, காய்ந்தான் தன் - நிரஸனம் செய்தவனாகிய பகவானுடைய, கையில் - திருக்கையில், வளைபோல் - கடகத்தைப் போல் அன்றிக்கே திருச்சங்கம்போல (இருக்கிறது). 5

ளென்னும்போது சிச்சப்தமும் பராதீந சேதன விஷயம். "இச்சாத ஏவ தவ விச்வபதார்த்த ஸத்தா" இத்யாதிகளிற்படியே ஜீவனுடைய ஜ்ஞாநாநந்த ஸ்வரூபாதிகளும் பராதீனங்களாயிறே யிருப்பது. இஜ் ஜீவவர்க்கத்தில் பீஜாங்குரக்ரமத்தாலே அநாதியான அபாரத ப்ரவாஹமடியாக முடிவில் பெரும்பாழான சிறைக்கூடத்திலே முப்பிரியான ஸத்வாதி குணங்களாலே கட்டுண்டு கழல விரகற்றுக் கிடக்கிறவர்கள் பத்தர்கள். இவர்களிலே மோக்ஷ சாஸ்த்ரங்களிற் சொல்லுகிறதொரு விரகாலே 'மோக்ஷயிஷ்யாமி' என்னும்படி முனிவு தீர்ந்து நித்யரோடொக்க முகப்பே கூவிப் பணிகொள்ளப் பெற்றவர்கள் முக்தர்கள். நித்யபகவதநுபவத்தாலே நித்ய கைங்கர்யபரரான சேஷ சேஷாசநாதிகள் நித்யர்கள். போக்யமென்பது அநுபாவ்யமென்றபடி. இது ஜீவேச்வரர்களுக்கும் பொதுவாகையாலே பூர்வாபர பதங்களிற்சொன்ன போக்த்ருத்வமும் நியந்த்ருத்வமும் இல்லாத விஷயத்தை இங்கு போக்யமென்கிறது. இத்தை அசித்தென்றது ஜ்ஞான ரஹிதமென்றபடி. அசேதனத்வம் கேவல குணங்களுக்கும் தர்மபூத ஜ்ஞானத்திற்கும் பொதுவாகிலும் இங்கு த்ரிவித அசேதனமென்று பூர்வர்கள் நிரூபித்தவை த்ரிகுணமும் காலமும் சுத்த ஸத்வமும் என்கிற த்ரவ்ய விசேஷங்கள். த்ரிகுணமாவது பரிமித ஸுகத்திற்கும் துக்கத்திற்கும் மோஹத்திற்கும் விசேஷ காரணங்களான ஸத்வ ரஜஸ் தமஸ்ஸுக்களாகிற குணங்களுக்காச்ரயமான த்ரவ்யம். இது கேவல ப்ருக்ருதியென்றும், ப்ருக்ருதி விக்ருதியென்றும், கேவல விக்ருதியென்றும் மூன்று வகையாய் இருபத்திநாலு தத்வரூபமாயிருக்கும். இவற்றில் ஸ்வபாவத்தாலும், பஞ்சீகரணாதிகளாலும், தேச கால பேதத்தாலே யுண்டாம் விக்ருதிகளுக்கு எல்லையில்லை. காலமாவது ஜடத்வவிபுத்வங்களையுடைத்தாய், பால வ்ருத்தாதி வ்யவஸ்தைகளுக்கு விசேஷ காரணமான த்ரவ்யம். இது எப்போதும் அவ்வோ வஸ்துக்களுடைய பூதபவிஷ்யத்வர்த்தமான வ்யபதேசங்களுக்கும், தன்னவச்சேதங்களாலே நியாமகமாயிருக்கும். இதற்கு ஸத்வாதி குணத்ரயமுமன்றிக்கேயிருக்க உபாதி விசேஷங்களாலே சீதகாலம் உஷ்ணகாலம் என்னுமாப்போலே ஸாத்விக ராஜஸ தாமஸாதி கால விபாகமுண்டாகிறது. ப்ரும்ம திவஸம் முதலாக மனுஷ்ய திவஸ பர்யந்தமாக எங்கும் இதுகண்டு கொள்வது. சுத்தஸத்வத்தில் இப்படிப்பட்ட கால விபாகமன்றிக்கே பூர்வாபராதி விபாக மாத்ரமேயாயிருக்கும். சுத்த

ஸத்வமாவது ரஜஸ்தமஸ்ஸுக்களன்றிக்கே ப்ராக்ருதஸத்வவிலக்ஷண ஸத்வத்துக்காஶ்ரயமான த்ரவ்யம். இது ஸபரிகரனான ஶ்ரிய:பதிக்கு போக்ய போகோபகரண போகஸ்தானரூபமாய்க் கொண்டு அநந்தாஶ்சர்யமாய் ஹிரண்ய கர்ப்பாதி ஸ்தானங்களெல்லாம் நரகமாய்த் தோற்றும்படியான ஆனுகூல்ய ப்ரகர்ஷத்தாலே பரமபத ஶப்தவாச்யமாயிருக்கும். இப்படி மூன்று வகையான சேதனாசேதனங்களுடைய ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகள் மூன்றும் தானிட்ட வழக்காம்படி நிற்கிற ஶ்ரிய:பதியை ப்ரேரிதாவென்கிறது. இவன் மூன்று ஸம்பந்த நியமத்தாலே ஸர்வ ஶரீரியாய், மூன்று வ்யாபார விஶேஷங்களாலே ஸர்வ கார்யங்களுக்கும் ஸர்வ காரணமாய், மூன்று காலத்திலும் ஏகரூப ஸ்வரூப ரூபங்களை யுடையவனாய், மூன்று ஸ்தானத்திலே நித்ய வாஸத்தை யுடையவனாய், மூன்று வகையான அர்ச்சாவதாரத்தை யுடையவனாய், மூன்று யுகத்திலே விஶேஷித்து ப்ரகாசிக்குமவனாய், மூன்றுகுணயுகத்தாலும் த்ரியுகனாய், மூன்று வ்யூஹங்களாலே மூவிரண்டு ப்ரகாரங்களைப் பண்ணுமவனாய், மூன்று புருஷார்த்தங்களுக்கும் மூலமாய், மூன்று ப்ரமாணங்களாலும் ப்ரதிக்ஷேதமில்லாதவனாய், மூன்று மாத்திரையான ஒற்றை யெழுத்துக்கு முக்யார்த்தமாய், மூன்று ரஹஸ்யங்களில் ஶிக்ஷையாலே விஶேஷித்தறியப்படும். ப்ரும்மத்திற்கு உபநிஷத்துக்களிற் சொன்ன த்ரைவித்யம் போக்த்ருத்வ விஶிஷ்ட ரூபத்தாலும் போக்யத்வ விஶிஷ்ட ரூபத்தாலும் ப்ரேரகத்வ விஶிஷ்ட ரூபத்தாலும் உபபந்நம். தன்னையும் ப்ரேரிதாவையும் பிரியவறிந்து பற்றினவனுக்கு அவன் ப்ரஸாதத்தாலே மோக்ஷமென்று இங்கே ஓதுகிறது. இப்படியே பஞ்சதஶாத்யாயாதிகளிற்படியே பராவரதத்வ விவேகம் பிறந்தால் "த்யேயோநாராயணஸ்ஸதா" என்றும், "ஸ்மர்த்தவ்யஸ்ஸததம் விஷ்ணு:" என்றும், "துஞ்சும்போதும் விடாதே தொடர்" என்றும் சொல்லுகிற ஸதாநுஸந்தாநம் க்ருத்யஶேஷமுடையவனுக்கு உபாயோபகார விதியாலே வந்த போகம். க்ருதக்ருத்யனுக்கும் கைங்கர்யோபகார விதியாலே வந்த போகம். போக்யனாய் நித்யஶ்ரீயான ஶேஷி ஸமாதிக தரித்ரனாற் போலே போகமும் நிஸ்ஸமாப்யதிகமாம்.

கட்டளைக் கலித்துறை.

அலையற்றவாரமுதக்கடலக்கடலுண்டமுகில்
விலையற்றநன்மணிவெற்புவெயினிலவோங்குபகல்

துலையொத்தன வென்பர் தூய்மறை சூடுந்துழாய்முடியார்க்
கிலையொத்தன வவன்பாதம் பணிந்தவர்க்கெண்ணுதற்கே 6

ஸத்ஸம்ப்ரதாயதத்நஸ் ஸமுத்ருதம் வேங்கடேஶேந
தத்வநவநீதமேதத் தநுதே நவநீத நர்த்தகப்ரீதிம்
வரத விரசயத்வம் வாரிதாஶேஷதோஷாம்
புநருபசிதபுண்யாம் பூஷிதாம் புண்யகோட்யா
ஸிதமுதிதமநோபிஸ் தாவகைர் நித்யஸேவ்யாம்
ஹததிபுஜநயோகாம் ஹஸ்திதாம்நஸ் ஸம்ருத்திம்

இதி கவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய
ஸ்ரீமத்வேங்கடநாதஸ்ய ஸ்ரீமத் வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு

ஸ்ரீமத் தத்வ நவநீதம் ஸம்பூர்ணம்.

சீரார் தூப்புல் திருவேங்கட முடையான் திருவடிகளே ஶரணம்

---

[ப - ரை.] அலையற்ற - அலையில்லாததான, ஆர் - பூர்ணமான, அமுத - அம்ருதத்தையுடைய, கடல் - ஸமுத்ரம்; அக்கடல் - அந்த ஸமுத்ரத்தை, உண்ட - முழுமையுங்குடித்த, முகில் - மேகம், விலையற்ற - விலையில்லாததான, நன் - ஶ்லாக்யமான, மணி - நீலரத்னமயமான, வெற்பு - மலை, வெயில் - வெயிலாலும், நிலவு - நிலவினாலும், ஓங்கு - ப்ரகாஸித்துக்கொண் டிருக்கிற, பகல் - மத்யாஹ்னம், (இவைகள்) தூய்மறை சூடும் - பரிசுத்தமான வேதத்தினால் தாங்கப்பட் டிருக்கிற, துழாய்முடியார்க்கு - திருத்துழாய் மாலையை கிரீடத்திலே தரித்துக்கொண்டிருக்கிற ஶ்ரியஃபதிக்கு, துலையொத்தன - ஸாத்ருஶ்யத்தை யடைந்தவைகள், அன்றிக்கே, துலை - தூக்கிப்பார்ப்பதில், அதாவது நிறையில், ஒத்தன - ஸத்ருஶமாயிருந்தன, என்பர் - என்று சொல்லுவார்கள் (பூர்வாசார்யர்கள்), அவன் பாதம் பணிந்தவர்க்கு - அவனுடைய திருவடிகளை யாஶ்ரயித்த பாகவதர்களுக்கு, எண்ணுதற்கே - இவைகள் ஸமானங்களென்றெண்ணுவதற்கே, ஒத்தன - ஸத்ருஶமான வஸ்துக்கள், இலை - இல்லை (என்பர்). 6

[ப - ரை.] ஸத்ஸம்ப்ரதாய - ஸத்ஸம்ப்ரதாயமாகிற, தத்ந:— தயிரிலிருந்து, வேங்கடேஶேந - வேங்கடேஶன் என்னும் திருநாமத்தையுடைய ஆசார்யனால், ஸமுத்ருதம் - எடுக்கப்பட்ட, ஏதத் - இந்த, தத்வநவநீதம் - தத்வநவநீதம் என்கிற க்ரந்தமானது, நவநீத நர்த்தகப்ரீதிம் - நவநீதத்திற்காக கோபர்களுடைய க்ரஹங்களில் நர்த்தனம் பண்ணின பகவானாகிய ஸ்ரீ க்ருஷ்ணனுக்கு, ப்ரீதிம் - ப்ரீதியை, தநுதே - செய்கிறது.

[ப - ரை.] வரத - ஸத்யவ்ரதக்ஷேத்திரத்தில் அர்ச்சாவதாரங்கொண் டிருக்கும் வரதனே, வாரிதாஶேஷ தோஷாம் - போக்கடிக்கப்பட்ட எல்லாத்தோஷங்களையு முடையதாயும், புந: - மேன்மேலும், உபசிதபுண்யாம் - வ்ருத்தி செய்யப்பட்ட புண்யத்தையுடைத்தானதாயும், புண்யகோட்யா - புண்யகோடி விமானத்தினால், பூஷிதாம் - அலங்கரிக்கப்பட்டதாயும், ஸித - பரிசுத்தமாயும், முதித-ஸந்தோஷத்தோடு கூடியதாயுமிருக்கிற, மநோபி: - மனதையுடைய, தாவகை: - உம்முடைய பக்தர்களினால், நித்ய ஸேவ்யாம் - எப்பொழுதும் ஸேவிக்கத் தகுந்ததாயுமிருக்கிற, ஹஸ்திதாம்ந: - ஹஸ்திகிரியினுடைய, ஸம்ருத்திம் - ஸம்பத்தை, ஹதரிபுஜநயோகாம் - போக்கடிக்கப்பட்ட ஶத்ரு ஜனங்களுடைய ஸம்பந்தத்தை யுடைத்தானதாக, த்வம் - நீர், விரசய - செய்துகொள்ளும்.

ஶ்ரீ:

ஶ்ரீமந்நிகமாந்த மகா தேசிகனருளிச்செய்த

# ஐந்தாவது ரஹஸ்யம்.

# ஶ்ரீமத் ரஹஸ்ய நவநீதம்.

நேரிசை வெண்பா.

*உத்திதிகழுமுரை மூன்றின் மும்மூன்றுஞ்*
*சித்தமுணரத் தெளிவித்தார்—முத்திதரும்*
*மூலமறையின்முடிசேர் முகில்வண்ணர்*
*சீலமறிவார் சிலர்* 7

ஸகல வேதஸாரமான திருமந்த்ரத்தில் மூன்று வாக்யங்களில் அடைவே ஸ்வரூபஸமர்ப்பணமும் பரஸமர்ப்பணமும் பலஸமர்ப்பணமும் அநுஸந்தேயம். இங்கு ஸ்வரூபஸமர்ப்பணமாவது "ஸர்வோபாதிவிநிர்முக்தம் க்ஷேத்ரஜ்ஞம் ப்ரும்மணி ந்யஸேத்" என்கிறபடியே வபுராதிகளில் வேறுபட்டு ஜ்ஞாநாநந்த ஸ்வரூபனாய் ஜ்ஞாநாநந்த குணகனாய் ஸ்வயம் ப்ரகாஶனாய் ஸ்வஸ்மை பாஸமானனாய் அணுவான நான் ஸர்வ ஜகதேககாரணபூதனாய் ஸர்வரக்ஷகனாய் ஸர்வஶேஷியான ஶ்ரீயஃபதியைப்பற்ற "நானுமுனக்குப் பழவடியேன்", "கண்ணபுர மொன்றுடையானுக்கடியேன் ஒருவர்க்குரியேனோ" என்கிறபடியே நித்யநிருபாதிக ஶேஷபூதனென்று அநு

---

[ப - ரை.] முத்திதரும் - மோக்ஷத்தைக் கொடுக்கிற, மூல - ஸகல புருஷார்த்தங்களுக்கும் முதற்காரணமான, மறையின் - வேதத்தின், முடி - ஶிரோபாகமாகிற வேதாந்தத்தில், சேர் - சேர்ந்திருக்கிற, முகில்வண்ணர் - மேகம்போன்ற வர்ணத்தையுடைய ஶ்ரீயஃபதியினுடைய, சீலம் - ஸ்வபாவத்தை, அறிவார் - அறிந்தவரான, சிலர் - ஆசார்யர்கள், உத்தி - ஶப்தங்களுக்குள், திகழும் - ஶ்லாக்யமான, உரைமூன்றில்—மூன்று ரஹஸ்யங்களில், மும்மூன்றும்—ஒவ்வொரு ரஹஸ்யத்தில் மூன்றர்த்தங்களாக மூன்று மூன்றர்த்தங்களை, சித்தம் - மனது, உணர - நன்றாக அறிந்துகொள்ளும்படி, தெளிவித்தார்—தெளிய ப்ரகாசிப்பித்தார்கள், 7

ஸந்திக்கை. இஸ்ஸம்பந்தாநுஸந்தானம் அர்த்த பஞ்சகாநுஸந்தானத்திற்கு அஞ்சுருவாணியாய் நிற்கும். பரஸமர்ப்பணமாவது "ஆத்மாத்மீயபரந்யாஸோ ஹ்யாத்ம நிக்ஷேப உச்யதே" என்கிறபடியே நித்யஶேஷபூதனுமாய், நித்யபரதந்த்ரனுமாய், அபிமதஸித்திக்குப் புகலொன்றில்லா வடியேனை யினியொரு கர்த்தவ்யத்திலே மூட்டாதே யடைக்கலமாகக்கொண்டு ரக்ஷித்தருளவேண்டு மென்கை. பலஸமர்ப்பணமாவது 'தேந ஸம்ரக்ஷ்யமாணஸ்ய பலே ஸ்வாம்யவியுக்ததா' இத்யாதிகளிற்படியே களையற்ற ஸூரிதுல்ய கைங்கர்யத்திற்கு ஸ்வரூபயோக்யனான ஆராவன்பிலடியேனுக்கு உபாதியடியாக வந்த அயோக்யதைகளெல்லாம் கழித்து வழுவிலாவடிமைகொண்டு வாழ்வித்தருளவேண்டுமென்கை. இப்படி ஶேஷஶேஷி பாவத்தாலே இருவரையுமுறவாக்கி, ஶேஷஶேஷி க்ருத்யத்தாலேஇருவரையும்வணக்கி, ஶேஷஶேஷிபலத்தாலே யிருவரையும் ஏகரஸமாக்குகிறது திருமந்த்ரம்.

இதிலே ஶாரீரகக்ரமத்தாலே தோற்றின பரதத்வத்தையும், பரமஹிதத்தையும், பரம புருஷார்த்தத்தையும், ஸ்வரூபாநுரூப விஶேஷணவிஶிஷ்டமாக வெளியிடுகிற ஶரணாகதிமந்த்ரத்தில் மூன்று வாக்யங்களிலடைவே உபாய விஶேஷமும், புருஷார்த்த விஶேஷமும், விரோதி நிவ்ருத்திவிஶேஷமும் ஸித்தஸாத்ய ரூபத்தாலே இருவகையாகச்சேர்ந்து நிற்கும்படி யநுஸந்தேயம். எங்ஙனே யென்னில்:- ஸ்ரீமானான நாராயணன் அபிமதஸித்திக்கு வ்யாஜமாத்ர ஸாபேக்ஷமுமாய், தத்ப்ரவர்த்தகமுமாய், வ்யவதான மற்று ப்ரதானமுமான ஸித்தாபாயம். "அநந்யஸாத்யே", "அகலகில்லேன்" இத்யாதிகளிற் சொல்லுகிற ஶரணாகதி அவனுடைய வஶீகாரணோபாயம். புருஷார்த்த விஶேஷமாவது "தனக்கேயாகவெனைக் கொள்ளுமீதே" என்கிறபடியே தன்னோடும்தான் பண்ணுகிற கைங்கர்யத்தோடும் துவக்கற்று "கண்டு கேட்டுற்று" இத்யாதிகளிற்படியே நிரதிஶய போக்யனான நித்யஸித்த ப்ராப்யத்திலே பரிபூர்ணாநுபவ பரீவாஹமாய்க்கொண்டு ஸாத்யமான ஶேஷியுகந்த கைங்கர்யம். விரோதி நிவ்ருத்தி விஶேஷமாவது "தனக்கேயாகவெனைக் கொள்ளுமீதே" என்கிறபடியே ஸர்வாவித்யா நிவ்ருத்தி பிறக்கை. இப்படிப்பட்ட ஸித்த ஸாத்யங்களான புருஷார்த்த ஹேதுக்களையும் ஸித்த ஸாத்யங்களான புருஷார்த்தங்களையும் சேர்த்து ஸாத்ய புருஷார்த்தத்தில் இருவகையான களையற்றபடியையும் காட்டுகிறது த்வயம். இதில் பூர்வோத்தர கண்டங்களுக்கு ஸப்ராஹ: சரணௌகாடம்",

"பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா" என்கிற இரண்டு ச்லோகங்களும் சேர்த்தியாகிறது.

இவற்றில் தோற்றின பரமஹிதத்தினுடைய அதிகார நைர பேக்ஷ்ய ஸ்வரூப ப்ரபாவங்களையும் வெளியிட்டுக்கொண்டு உபப்ரும் மணமான சரமச்லோகத்தில் மூன்று வாக்யங்களிலடைவே அதிகாரி க்ருத்யமும், ஶரண்யக்ருத்யமும், க்ருதக்ருத்யனுடைய உத்தரக்ருத்ய மும் அனுஸந்தேயம். அதிகாரி க்ருத்யமாவது "மேம்பொருள்" இத்யாதிகளிற்படியே விவேகாதியுக்தனாய்க் கொண்டு "விடைக்குலங்கள்" என்கிற பாட்டின்படியே ஸாதனதர்மமான ஸர்வலோக ஶரண்யனுக்கு விண்ணப்பம் செய்கை. ஶரண்யக்ருத்யமாவது "தமர்கள் கூட்டவல்வினையை நாசஞ்செய்யும் சதிர்மூர்த்தி" என்கிறபடியே ஶரணாகதவிரோதிகளை யெல்லாம் கழிக்கைக்கு ஸர்வஶேஷியான தன்னைத் தட்டுமாற்றி தாழநின்று ஏற்றின சுமை யெல்லாம் ஏறிட்டுக்கொண்டு இவனைத் தன்னளவாக உயரவெடுக்கை. உத்தரக்ருத்ய மாவது "அத்தனாகி யன்னையாகி" என்கிற பாட்டின்படியே மனஸ்ஸைத்தேற்றி "சிற்றஞ்சிறுகாலே" யென்கிற பாட்டின்படியே ஸர்வ ப்ரகாரத்தாலும் அநந்யனாய் ஸ்வயம் ப்ரயோஜன ஶாஸ்த்ரீயகைங்கர்யபரனாகை. இப்படியால் ஓரதிகாரியை ஶரண்யன் ஹிததமத்திலே மூட்டும்படியையும், இவனுக்கு ப்ரியதமத்தைப் பண்ணும்படியையும், ஶரணாகதன் வீதஶோகனாய் ஸர்வஶேஷிக்கு ப்ரியதமங்களான ஸர்வஶேஷவ்ருத்திகளையும் பண்ணும் ப்ரகாரத்தையும் கணிசிக்கிறது சரமஶ்லோகம். இதில் சொன்ன ஶரண்யனுக்கும் ஶரணாகதிக்கும் பலத்திற்கும் தேசகாலாதி பரிச்சேதமில்லை. ப்ரபத்யுத்யாதிகளெல்லாம் இதின் விஸ்தாரம்.

எண்சீர்கழிநெடிலாசிரிய விருத்தம்.

எனக்குரியேனெனது பரமென்பேறென்று
  இவையனைத்துமிறையில்லா விறைக்கடத்தோம்
தனக்கிணையொன்றில்லாத திருமால்பாதம்
  சாதனமும்பயனுமெனச் சலங்கடீர்ந்தோம்
உனக்கிதமென்றொருபாகனுரைத்ததற்றே
  மூத்தமனுமவனுதவி யெல்லாங்கண்டோம்
இனிக் கவருமவை கவர விகழ்ந்தோஞ்சோக
  மிமையவரோடொன்றினி நாமிருக்கு நாளே. 8

குருபஜநநேத்ரபாஜா மதிதரஹஸ்யேந வேங்கடேஶேந
நவநீதமிவ க்ருஹீதம் நவகமிதம் நித்யமாஸ்வாத்யம்.

---

[ப - ரை.] எனக்கு, உரியேன் - ஶேஷபூதன், நான் என்று சேர்த்துக்கொள்ளவும், பரம்-என்னை ரக்ஷிக்கவேண்டிய பரம், எனது-என்னுடையது, என்பேறு - என்னுடைய ப்ரயோஜனம், அதாவது அந்தரக்ஷணத்தினால்வரும்ப்ரயோஜனமென்றர்த்தம், என்னாது-என்று எண்ணாமல், இவையனைத்தும் கீழ்சொல்லிய ஸ்வரூபம், பரம், பலம், இவைகளெல்லாவற்றையும், இறையில்லா - தனக்கு மேற்பட்ட ஸ்வாமி இல்லாதவனாகிய, இறைக்கு - ஸ்வாமியான ஶ்ரிய:பதிக்கு, அடைத்தோம் - ஸமர்ப்பித்தோம். தனக்கு, இணை - ஸத்ருஶம், ஒன்று - ஒரு வஸ்து, இல்லாத - இல்லாதவனாகிய, திருமால் - ஶ்ரிய:பதியினுடைய, பாதம்-திருவடிகளே, சாதனமும் - உபாயமும், பயனும் - ப்ரயோஜனமும், என - என்றனுஸந்தித்து, சலங்கள் - ஸ்வாதீன ஸ்வார்த்த கர்த்ருத்வ போக்த்ருத்வ ப்ரமங்களாகிற தோஷங்களை, தீர்ந்தோம் - நிவ்ருத்தி செய்தோம், ஒரு பாகன் - அத்விதீயனாகிய ஸாரதியாகிய ஸ்ரீ க்ருஷ்ணன், உனக்கு - அகிஞ்சனனான உனக்கு, இதம்-இது ஹிதம் என்று, உரைத்தது - அருளிச்செய்த வார்த்தையை, (அதாவது) ப்ரபத்தியை, உற்றோம் - உபாயமாக அங்கீகரித்தோம், உத்தமனாமவன் - உத்தமனாகிய அந்த ஶ்ரிய:பதியினுடைய உதவியெல்லாம் - உபகாரங்களையெல்லாம், கண்டோம் - அறிந்தோம், இனி - இதற்குமேல், கவருமவைகவர - அடையவேண்டிய ப்ரீதி முதலியவைகள் கவர, சோகம் - துக்கத்தை, இகழ்ந்தோம் - நிவ்ருத்தி செய்தோம், இனி - இதற்குமேல், நாமிருக்குநாள் - நாம் இவ்வுலகத்திலிருக்கும் நாள்களில், இமையவரோடு - நித்ய ஸூரிகளுடன், ஒன்று-ஸமானம். 8

[ப - ரை.] குருபஜந - ஆசார்ய உபாஸநமாகிற, நேத்ரபாஜா - தயிர்கடையும் கயிற்றையுடையவராகிய, அன்றிக்கே ஆசார்யபக்தியினால் உண்டாக்கப்பட்ட ஜ்ஞானமாகிற கண்ணையுடைய, மதிதரஹஸ்யேந - கடையப்பட்ட ரஹஸ்யங்களையுடைத்தாயிருக்கிற, வேங்கடேஶேந - வேங்கடேஶன் என்கிற ஆசார்யனால், க்ருஹீதம் - எடுக்கப்பட்ட, நவநீதமிவ - வெண்ணெயைப் போலேயிருக்கிற, இதம் -

ப்ரஶமித கலிதோஷாம் ப்ராஜ்யபோகாநுபந்தாம்
ஸமுதிதகுணஜாதாம் ஸம்யகாசாரயுக்தாம்
ஶ்ரிதஜநபஹுமாந்யாம் ஶ்ரேயஸீம் வேங்கடாத்ரௌ
ஶ்ரியமுபசிநு நித்யம் ஸ்ரீநிவாஸ த்வமேவ

இதி கவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய
ஸ்ரீமத்வேங்கடநாதஸ்ய ஸ்ரீமத் வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
ஸ்ரீமத் ரஹஸ்யநவநீதம் ஸம்பூர்ணம்.

---

சீரார் தூப்புல் திருவேங்கட முடையான் திருவடிகளே சரணம்.

---

இந்த, நவகம் - ஒன்பது அர்த்தமும், நித்யம் - எப்பொழுதும், ஆஸ்வாத்யம் - அநுபவிக்கத்தக்கது.

[ப - ரை.] ஸ்ரீநிவாஸ - ஓ! ஸ்ரீநிவாஸனே, த்வமேவ - நீர் தானே, வேங்கடாத்ரௌ - திருவேங்கடமாமலையில், ப்ரஶமித கலிதோஷாம் - போக்கடிக்கப்பட்ட கலிகாலத்தினுண்டான தோஷத்தை யுடையதாயும்,ப்ராஜ்ய - அதிகமான, போகாநுபந்தாம்-போகத்தினுடைய ஸம்பத்தை யுடையதாகவும், ஸமுதிதகுண ஜாதாம் - சேர்ந்திருக்கிற குணங்களின் ஸமூஹத்தை உடைத்தான தாயும், ஸம்யகாசார - நல்ல அநுஷ்டானத்துடன், யுக்தாம்-சேர்ந்த தாயும், ஶ்ரிதஜன - உம்முடைய ஆஶ்ரிதர்களினால், பஹுமாந்யாம் - கொண்டாடக் கூடியதாயும், ஶ்ரேயஸீம் - உத்தமமாயுமிருக்கிற, ஶ்ரியம் - கைங்கர்ய ஸ்ரீயை, நித்யம் - எப்பொழுதும், உபசிநு - வ்ருத்திசெய்யும்.

ஸ்ரீ:

ஸ்ரீ மங்கமாந்த மஹா தேசிகனருளிச்செய்த

# ஆருவது ரஹஸ்யம்.

# ஸ்ரீமத் தத்வ மாத்ருகை.

நேரிசை வெண்பா:

தத்துவங்களெல்லாந் தகவாலறிவித்து
முத்திவழிதந்தார் மொய்கழலே—அத்திவத்தி
லாரமுதமாரு மிருநிலத்திலென்றுரைத்தார்
தாரமுதலோதுவித்தார் தாம். 9

ஸதாசார்யோபதேசத்தாலே ஶாரீரக மூல மந்த்ராதிகளைக் கொண்டு ஸாத்விகருக்கறிய வேண்டும் தத்வம் பரமென்றும், அவரமென்றும் இருவகையாயிருக்கும்(1). பரதத்வமாவது நினைந்த வெல்லாப் பொருள்களுக்கும் வித்தாய், ஸர்வ வஸ்துக்களிலும் உடல்மிசையுயிர் எனக்கரந்து, "நந்தா விளக்கே யளத்தற்கரியாய்" என்றும், "உணர் முழுநலம்" என்றும், "அளப்பரியவாரமுதை" என்றும், "அமலன்" என்றும் சொல்லுகிறபடியே அத்யத்புதமாய் குணங்களுக்கும் அதிஶயாவஹமாய் திருவுக்கும் திருவாம்படி நிருபாதிக மங்களமான ஸ்வரூபத்தையுடையனாய் "உயர்வறவுயர்நல முடையனெவனவன்" என்

---

[ப - ரை] தாரம் - ப்ரணவம், முதல் - முதலாக, ஓதுவித்தார், திருமந்த்ரம் முதலிய ரஹஸ்யங்களை உபதேசித்த ஆசார்யர்கள், தாம்-தாங்களே, தகவால் - க்ருபையால், தத்துவங்களெல்லாம் - பராவர தத்துவங்களெல்லாவற்றையும் அறிவித்து - தெரிவித்து, முத்திவழி தந்தார்-மோக்ஷமார்க்கங்களான பக்திப்ரபத்திகளை உபதேசித்தவர்களின், மொய் - மொய்த்துக்கொண்டிருக்கிற, கழலே - திருவடிகளே, அத்திவத்தில் - அந்தப் பரமபதத்தில், ஆரமுதம் - பூர்ணமான அம்ருதம், இரு - விஸ்தாரமுள்ள, நிலத்தில் - பூமியில், ஆரும் - உபாயமாகும், என்றுரைத்தார் - என்று உபதேசித்தார்கள். 9

னும்படி அநவதிகாதிசயாநந்தம் முதலான அனந்த கல்யாண குணங்களையுடையனாய், ஆஸ்ரிதர் பலபிறப்பும் பிறவாதபடி தானென்ன யோனியுமாய் பிறக்கக்கடவனாய், அவர்கள் நாட்டில் பிறந்து படுமவை படாமைக்காகத் தான் பிறந்து படாதன படக்கடவனாய், தான் சொல்லிற்றுச் செய்யும் தேவப்ருக்ருதிகளுக்குத் தானும் சொல்லிற்றுச் செய்யக்கடவனாய், விபரீதாசரணம் பண்ணும் ஆஸுரப்ருக்ருதிகளுக்குத் தானும் விபரீதாசரணம் பண்ணக்கடவனாய், தன்னை அந்தராத்மாவென்று நினைத்திருப்பாரை தானும் தனக்கு அந்தராத்மாவென்று நினைத்திருக்குமவனாய், தனக்கு ஆத்மாத்மீய ஸமர்ப்பணம் பண்ணினாருக்குத் தானும் ஆத்மாத்மீய ஸமர்ப்பணம் பண்ணக்கடவனான ஸ்ரியஃபதி புருஷோத்தமன் (2). இவன் "பொங்கோதஞ்சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதுஞ் சோராமே யாள்கின்ற வெம்பெருமான் செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார்" என்கிறபடியே உபயவிபூதி நிர்வாஹகனாய் "தன்னொப்பாரில்லப்பன்" என்றும், "இனனிலனெனனுயிர் மிகு நரையிலனே" என்றும், "ஒத்தார் மிக்காரையிலையாய மாமாயா" என்றும் சொல்லுகிறபடியே ஸமாதிகதரித்ரனாயிருக்கும் (3). அப்ராக்ருதமாய் பஞ்சோபநிஷத் ப்ரதிபாத்ய ஶுத்த ஸத்வ பஞ்சஶக்திமயமாய், அஸ்த்ரபூஷணரூப விசித்ரஜகத்வாஶ்ரயமான திவ்யமங்களவிக்ரஹ விஶேஷத்தாலே விஶிஷ்டனாய்க்கொண்டு பரவ்யூஹாதி பஞ்சப்ரகாரனாயிருக்கும் (4). பரரூபமாவது நித்யமாய் ஏகரூபமாய் நித்யருக்கும் முக்தருக்கும் ஸேவ்யமாய் "குழுமித்தேவர் குழாங்கள் கைதொழச்சோதி வெள்ளத்தினுள்ளே" என்றும், "ஆதியஞ்சோதியுரு" என்றும் சொல்லுகிறபடியே வானுயரின்பம் மன்னுவீற்றிருந்த ரூபம் (5). வ்யூஹங்களாவன இப்பரரூபமடியாக பூர்வ பூர்வத்திற்கு உத்தரோத்தரம் கார்யமாகக்கொண்டு பிறந்து "முன்னை வண்ணம் பாலின்வண்ணம் பாலினீர்மை செம்பொனீர்மை" இத்யாதிகளிற்படியே க்ருத த்ரேதாதி யுகங்கள்தோறும் மாறி மாறி வரும் நிறங்களையுடைத்தான ரூபங்கள் (6). அபிமான விஶேஷத்தாலே ஜீவமனோஹங்கார ஶப்தவாச்யங்களான ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்த ரூபங்களில் ஜ்ஞான பலாதிகளில் இவ்விரண்டு குணங்களும் ஸம்ஹார ஶாஸ்த்ர ப்ரவர்த்தனாதிகளில் இவ்விரண்டு தொழில்களும் உடைத்தாயிருக்கும் (7). வாஸுதேவாதிகளான நாலு

வ்யூஹங்களிலும் ஒவ்வொரு வ்யூஹத்திலே மும்மூன்றாகப் பிரிந்து "கேசவன்தமர்" இல் சொல்லுகிற திருநாமங்களையுடைய ரூபங்கள் பன்னிரண்டும் வ்யூஹாந்தரங்கள் (8). விபவங்களாவன "மீனாயாமை யுமாய்" இத்யாதிகளிற்படியே விபூதிகளோடு ஸஜாதீயங்களாய்த் தோன்றும் ரூபங்கள் (9). அவைதன்னிலே தோன்றுவன சில ரூபங்கள் விபவாந்தரங்கள் (10). அந்தர்யாமி ரூபமாவது "கண்கள் சிவந்து" இத்யாதிகளிற்படியே உள்ளே யோகிகளுக்குக் காணலாவதொரு ஸூக்ஷ்மரூப விசேஷம் (11). அர்ச்சாவதாரமாவது "தமருகந்ததெவ்வுருவம் அவ்வுருவந்தானே தமருகந்ததெப்பேர் மற்றப் பேர்", "நெஞ்சினால் நினைப்பானெவனவனாகு நீள்கடல்வண்ணனே" என்னும்படி ஸ்வயம் வ்யக்த திவ்யார்ஷ மாநுஷ வைஷ்ணவ ஸ்தானங்களிலே ஸர்வஸஹிஷ்ணுவாய் அர்ச்சகபாரதந்த்ர்யத்திற்கு எல்லை நிலமாய் சேஷ சேஷிபாவசபளமாய் "பூமௌகதம் பூஜயதாம்ப்ரமேயம்" என்று தானே யருளிச்செய்த ரூபம் (12). "தன்னுளே திரைத்தெழுந்து" இத்யாதிகளிற்படியே நிற்கிற இவ்வஞ்சு ரூபமும் அகலகில்லேனிறையுமென்றலர்மேல் மங்கை யுறையும்படியான ஸ்வாச்ரயமாயிருக்கும் (13). "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்கிறபடியே ஸலக்ஷ்மீகமாக இப்பரதத்வத்தைக் கண்டவன் மற்றிங்கோர் திருவில்லாப்புதுதெய்வம் தேறான் (14). இப்படிச் சுடர்மிகு சுருதியுளானான ச்ரிய:பதிக்கு சரீரமென்று ப்ரமாண ஸித்தமான அவரதத்வம் சேதனமென்றும் அசேதனமென்றும் இரண்டு வகையாயிருக்கும் (15). சேதனமான அவரதத்வமாவது ஜீவசப்தவாச்யமாய் ஸ்வரூபத்தாலும் சக்த்யாதி குணங்களாலும் பரிச்சேத்யமான அஹமர்த்தம் (16). இது ஸ்வயம் ப்ரகாசதையாலும் ஜ்ஞானகுணாச்ரயமாகையாலும் ஜ்ஞானமென்று பேர் பெற்று இரண்டுபடியாலும் தனக்குத்தான் தோன்றுமதாய் அநுகூல ஸ்வபாவமாய் அதிஸூக்ஷ்மமாய் திலத்தில் தைலம்போலவும் தாருவில் அக்நிபோலவும் ஸர்வாசேதனங்களிலும் அநுப்ரவேசிக்க வற்றாய் நிர்விகாரமாய் குணத்ரய ரஹிதமாய்க் கண்டு கேட்டுற்று மோந்துண்டுழலும் ஐங்கருவிகளுக்கும் விஷயமன்றிக்கே நிஷ்க்ருஷ்ட வேஷத்தில் தேவத்வமநுஷ்யத்வ பேதங்களில்லாமையாலே தேவமநுஷ்யாதி சப்தகோசரமன்றிக்கே ஸர்வாத்ம ஸாதாரணங்க

ளான அஹம் புத்தியாலே தந்தாமுக்கனுபாவ்யமாயிருக்கும் (17). நானென்கிற வர்த்தந்தானே பரபுத்தி விஷயமாம்போது அவனிவனுவனென்றும்நீயென்றும் தோற்றும் (18). இஜ்ஜீவதத்வம்பத்தரென்றும் பத்தரஹிதரென்றும் இரண்டு படியாயிருக்கும் (19). பத்தராவார் பல செய்வினை வன்கயிற்றால் திண்ண மழுந்தக் கட்டுண்டு பெருந்துயரிடும்பையிலே மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து மண்ணாய் நீரெரிகால் மஞ்சுலாவுமாகாசமுமாம் புண்ணாக்கையின் வழியுழன்று நாநாவித நரகம்புகும் பாவஞ்செய்து சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த முடிவில் பெரும்பாழிலே பொய்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கும் அழுக்குடம்பும் இன்னின்ற நீர்மையென்னும்படி தன்னுருக்கொடுத்து வேற்றுருக்கொண்டு ஆவாரார் துணையென்றலைநீர்க்கடலுளழுந்தும் நாவாய்போல் பிறவிக்கடலுள்நின்று துளங்குகின்ற சேதனர் (20). இவர்களுக்கநாதியானகர்மப்ரவாஹவைஷம்யத்தாலே அவ்வோபோகங்களுக்குப்போலே அவஸரப்ரதீக்ஷ பகவத்க்ருபா மூலமான மோக்ஷத்திற்கு முற்பாடு பிற்பாடுகளுண்டாம் (21) பத்தரஹிதர் முக்தர் என்றும் நித்யரென்றும் இரண்டுவகை (22). முக்தராவார்எம்மாபாவியர்க்கும் விதிவாய்க்கின்று வாய்க்குங்கண்டீரென்னும்படி நடுவேவந்துய்யக்கொள்கின்ற நாதன் திருவருளாலே கருவிலே திருவுடையராய், பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகிவந்து பாதவிலச்சினைவைத்து ஞானக்கைதர, யானே என்தனதே என்கிற அஹங்கார மமகாரங்களாகிற படுகுழியினின்றுமேறி, ஒண்டொடியாள் திருமகளும் திருமகள் சேர்மார்பனுமே நிலாநிற்பக்கண்ட சதிர்கண்டு, ஐங்கருவிகண்டவின்பம் தெரிவரிய ளவில்லா சிற்றின்பம் ஒழிந்து, களைகண்மற்றின்றி, நாகணைமிசை நம்பிரான் சரணேசரண் நமக்கென்று திருநாரணன் தாள்காலம்பெறச் சிந்தித்து, புகலொன்றில்லாவடியே னுன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனே யென்று அடைக்கலம்புகுந்த வென்னை அஞ்சலென்ன வேண்டுமென்றும், தொன்மாவல் வினைத்தொடர்களை முதலரிந்து "மங்க ஒட்டுன்மாமாயை", "மாயஞ்செய்யேலென்னை" என்றும் வளைத்து, ஆக்கை விடும்பொழுதெண்ணி, பாவமெல்லாம் சுமமெனாதே கைவிட்டோடித் தூறுகள்பாய்ந்து, அமரரோடு உயர்விற்சென்று, மன்னுங்கடுங்கதிரோன் மண்டலத்தினன்னடுவுள் அன்னதோரில்லியினூடுபோய், இமையோர்வாழ்தனி முட்டைக் கோட்டை

யிணைக்கழித்து, வாட்டாற்றான் பணிவகையே வானேறப்பெற்று, ஆண்
மின்கள் வானகமாழியான்தமரென்று வாளொண் கண்மடந்தையர்
வாழ்த்த கொடியணி நெடுமதிள் கோபுரங்குறுகி, வாசலில் வானவர்
வைகுந்தன்றமரெமரெமதிடம் புகுதென்று, விதிவகை புகுந்தன
ரென்று நல்வேதியர் பதியினிற் பாங்கினிற்பாதங்கள் கழுவ, நிதியுநற்
சுண்ணமும் நிறைகுடவிளக்கமும் மதிமுகமடந்தையர் ஏந்திவந்தெதிர்
கொள்ள, தன்மைபெறுத்தித் தன்தாளிணைக் கீழ்கொள்ளுமப்பன்
கொழுஞ்சோதி யுயரத்து கூட்டரிய திருவடிக்கள்கூட்ட, அவன் தாளி
ணைக் கீழ்வாழ்ச்சிபெற்று, அடியார்கள் குழாங்களுடன் கூடி, மாமணி
மண்டபத்திலந்தமில் பேரின்பத் தடியரான நித்யஸூரிகளோடு
நிரையொக்கவிருந்து, அனைத்துலகுமுடைய வரவிந்தலோசனனைத்
தினைத்தனையும் விடாதேயனுபவித்து ஒழிவில்காலமெல்லாமுடனாய்
மன்னிவழுவிலா வடிமைசெய்து வாழும்படி வீடுதிருத்துவான் பக்
கல்வீடு பெற்றவர்கள் (23). நித்யராவார் நித்யமான பரிபூர்ண
பகவதனுபவத்தை யுடையவராய் வடிவுடைவானோரென்றும், முடி
யுடைவானவர் என்றும், வைகுந்தன்றமரென்றும், ஸூரிகளென்
றும், ஸாத்யதேவர்களென்றும் சொல்லப்பட்ட அனந்த கருட
விஷ்வக்ஸேநாதிகளான அயர்வறுமமரர்கள் (24). பத்தருக்கு கர்ம
ப்ரவாஹம் அநாதியாய் அந்தவத்தாயிருக்கும் (25). முக்தருக்கு கைங்
கர்ய ப்ரவாஹம் ஆதிமத்தாய் அந்த ரஹிதமாயிருக்கும் (26). நித்
யருக்கு பகவதபிமத விபரீதருசியில்லாமையாலே ஒருக்காலத்திலும்
கர்மபந்தமன்றிக்கே அதிகார நியமத்தோடு கூடின கைங்கர்ய ப்ரவா
ஹம் அநாத்யந்தமாயிருக்கும் (27). இப்படி ஷட்விம்சகனென்றும்
பஞ்சவிம்சகனென்றும் பிரிக்கப்பட்ட பரமாத்மாவிற்கு ஸர்வாவஸ்தை
யிலும் ஸ்வாஸ்ரித விஷயத்திலுள்ள பாரதந்த்ர்ய ஸேஷத்வங்கள்
ஸ்வாதந்த்ர்ய நிபந்தனங்களாயிருக்கும் (28). ஜீவாத்மாக்களுக்கு
ஸர்வாவஸ்தையிலும் ஸ்வ வ்யாபாராதிகளிலுள்ள ஸ்வாதந்த்ர்ய
ஸேஷித்வங்கள் பாரதந்த்ர்ய நிபந்தனங்களாயிருக்கும் (29). இப்படி
பரமஸேஷியாயும் த்வாரஸேஷியாயுமுள்ளபராவராத்மாக்களிருவரிலும்
வேறுபட்ட அசேதன தத்வம் த்ரிகுணமென்றும் அத்ரிகுணமென்
றும் இரண்டுவகையாயிருக்கும், அத்ரிகுணம் காலமென்றும்
ஸுத்த ஸத்வமென்றும் இரண்டுவகையாயிருக்கும் (30). அசேதன
த்ரவ்யமான தர்மபூதஜ்ஞானத்தோடே கூட நாலுவகையென்றெண்ண

லாயிருக்க இத்தை ஶரீரமாகக் கொள்ளாமையாலும் ப்ரயோஜன விஶேஷத்தாலும் இவை மூன்றையும் வகுத்து அநுஸந்தித்தார்கள் (31). த்ரிகுணமாவது ஸத்வரஜஸ்தமஸ்ஸுக்களுக்கு ஆஶ்ரயமான த்ரவ்யம் (32). ஸத்வரஜஸ்தமஸ்ஸுக்களாவன அடைவே ஜ்ஞாந ஸுகாதிகளுக்கும் ராகதுக்காதிகளுக்கும் ப்ரமாத மோஹாதிகளுக்கும் ஹேதுக்களான குண விஶேஷங்கள் (33). இத்ரிகுணத்தினுடைய காரண தசையையும் கார்ய தசையையுங்கூட பிரகிருதி மானுங்காரமனங்கள், பொங்கைம்புலனும் பொறியைந்தும் கருமேந்த்ரியமைம்பூதமென்றும் பிரித்து ஶாஸ்த்ரம் சொல்லா நிற்கும் (34). இவற்றில் குணஸாம்யத்தை யுடைய மூலப்ரக்ருதியில் ஒரு ப்ரதேசத்திலே பகவத் ஸங்கல்ப நியதகாலமான குணவைஷம்யமடியாக ஸாத்விகராஜஸ தாமஸங்களென்று பிரிவுடைத்தான மஹான் பிறக்கும் (35). இதினின்றும் இவ்வடைவேஸாத்விகராஜஸதாமஸாஹங்காரங்கள் உண்டாம் (36). ராஜஸாஹங்காரம் துணையாக ஸாத்விகாஹங்காரத்தினின்றும் ஏகாதஶேந்த்ரியங்களும் தாமஸாஹங்காரத்தினின்றும் தன்மாத்திரைகளை யிடையிட்டுக்கொண்டு பஞ்சபூதங்களும் உத்பந்நங்களாம் (37). பூதங்களுக்கு உபாதானங்களான ஶப்தாதி தன்மாத்திரைகளும் பூதங்களுக்கு குணங்களான ஶப்தாதிகளும் வேறுபட்டவை (38). இப்பூதங்களைந்திலும் குணங்களைந்தும் நிற்கும் அடைவை "பூநிலாயவைந்துமாய்" என்கிற பாட்டின்படியே அநுஸந்திப்பது (39). இப்படி மஹதாதிகளான தத்வங்களும் இவற்றின் கலசுதலடியாகப்பிறக்கும் அநந்தங்களான ப்ரும்மாண்டங்கள் முதலான கார்யங்களுமெல்லாம் த்ரிகுணத்ரவ்யமாகிற பெருங்கடலிலலைகளும் நுரைகளும் குமிழிகளும் போலே ஆவதழிவதாய் வருகிற ப்ரவாஹமநாதியாக விச்சேதமறப்போருகைக்கடியாய்பலபல மாயமயக்குகளால் இன்புறு மிவ்விளையாட்டுடையானுடைய இச்சாநுவ்ருத்தியான காலமநாதியாய் அனந்தமாய் நடக்குமென்னு மிடத்தை "அநாதிர்பகவான்காலః" இத்யாதிகளிலே கண்டுகொள்வது (40). காலமாவது எதிர்நிகழ் கழிவென்றும், முன், பின், ஒருகாலம், பலகாலம், என்றாற்போலே சொல்லுகிற பாசுரங்களுக்கு இலக்காயிருப்பதொரு த்ரவ்ய விசேஷம் (41). இதினிறைப்பொழுது முதலாக நாள், திங்கள், ஆண்டு, ஊழி, கல்பம், பரார்த்தம், த்விபரார்த்தம், மஹா கல்பம் என்றாற்போலே சொல்லுகிற எல்லைகளெல்லாம் ஸ்வதந்த்ர ஸங்கல்பமாகிற சூராவளிக்காற்றாலே சுழன்று வாரா நின்றால் கழிந்த க்ஷணம்

களும் கல்பங்களும் வரும் க்ஷணங்களும் கல்பங்களும் அநந்தங்களாய் இவற்றாலே லீலா விபூதியிலுள்ள கார்யங்களுக்கு உத்பத்தி ஸ்திதிநாஶ வ்யவஸ்தை யுண்டாயிருக்கும் (42). ஶுத்தஸத்வத்தில் இக்கால தத்வமுண்டேயாகிலும் அங்குள்ள கார்யங்களினுடைய உத்பத்யாதிகளுக்கு இக்கடைத்த காலவிஶேஷம் நியாமகமன்று (43). ஶுத்த ஸத்வமாவது குணத்ரயரஹிதமாயும் குணத்ரயாஶ்ரயமாயுமுள்ள த்ரவ்யங்களில் காட்டில் வேறுபட்டு விலக்ஷணமான ஸத்வ குணத்துக்காஶ்ரயமான த்ரவ்யம் (44). இதன்படியைப் பார்த்தால் பரமயோகி வாங்மனஸாபரிச்சேத்ய ஸ்வரூபஸ்வபாவமாய், சேணுயர் வானமென்றும், தெளிவிசும்பென்றும், பொன்னுலகு என்றும், கலங்காப்பெரு நகரமென்றும், மாகவைகுந்தமென்றுஞ் சொல்லப்பட்ட வேறுபாட்டையுடைத்தாய், ப்ரும்மாதிபதங்களுமெல்லாம் நரக துல்யங்களாய் தோற்றும்படி அபரிமிதைஶ்வர்யங்களான போக்ய போகோபகரண போகஸ்தானங்களை யுடைத்தாய், ஸர்வேஶ்வரனுக்கும் நித்யருக்கும் முக்தருக்கும் விக்ரஹாதிரூபேண விசித்ர ப்ரவாஹமாயிருக்கும் (45). இப்படி அனந்தங்களான ஜனபத நகரவிமான மண்டப கோபுராதி விபாகங்களையுடைத்தான திவ்யலோகத்தில் ப்ரதான தமமான திருமாமணி மண்டபத்தில் அனந்த தேவதாத்மகமான திவ்யயோக பர்யங்க விஶேஷத்திலே த்ரிவித சேதனரையும் த்ரிவிதா சேதனங்களையும் ஸ்வாதீனங்களாக்கிக் கொண்டு "வைகுண்டே து பரே லோகே" இத்யாதிகளிற்படியே ஸர்வ ஶேஷியான ஶ்ரிய꞉பதி எழுந்தருளியிருக்கும்படி முமுக்ஷு தசையில் நித்யாநுஸந்தேயமாய் முக்ததசையில் நித்யாநுபாவ்யமாயிருக்கும் (46). இப்பராவர தத்வங்களிரண்டுக்கும் ஓரோராகாரங்களாலே ஸாதர்ம்யமுண்டேயாகிலும் விஶேஷாகாரங்களாலே வேறுபட்டு ஶேஷ ஶேஷிபாவ நியந்த்ரு நியாம்யபாவ வ்யாப்யவ்யாபகபாவ ஆதாராதேயபாவாதிகளாலே இவையொன்றி நிற்குநிலை ப்ரணவத்திலும், ஸத்யஶப்தத்திலும், புருஷஶப்தத்திலும், நாராயணஶப்தத்திலும், புருஷோத்தமஶப்தத்திலும், "கறந்த பாலுண்ணெய்யேபோல்", "அடியேனுள்ளானுடலுள்ளான்", "ஊனில் உயிரிலுணர்வினினின்ற ஒன்றை", "உலகு நின்றொடொன்றி நிற்க வேறு நிற்றி' இத்யாதிகளிலும் சுருங்க வநுஸந்திக்கலாம் (47). ஒன்றை யறிகையும் அதினறிவடியாக வ்யாபரிக்கையும் ஒரு பலத்தை புஜிக்கையும் தனக்குத் தான் தோன்றுகையுமில்லாத த்ரவ்யமசேதனம் (48). இவற்றை பராதீனமாகவுடையது

ஜீவதத்வம் (49). த்ரிவித சேதநாசேதநங்களுடைய ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகள் மூன்றும் தானிட்ட வழக்காம்படி நிற்கிறது பரதத்வம் (50). இத்தத்வவிவேகத்திற்கு ப்ரயோஜனம் தன் விசேஷணங்களை யறியாமையாலே வருகிற ப்ருக்ருத்யாத்மப்ரமமும் தன் விசேஷ்யத்தை யறியாமையாலே வருகிற ஸ்வதந்த்ராத்ம ப்ரமமும் கழிந்து தன் ஸ்வரூபத்திற்கு த்யாஜ்யோபாதேய புருஷார்த்தங்களைத்தெளிந்து விபரீதாபிஸந்திநிவ்ருத்தியும் ப்ராப்யருசியும் பிறந்து ப்ராபகஸாபேக்ஷனைகை (51).

கட்டளைக் கலித்துறை.

திருநாரண னெனும் தெய்வமும் சித்துமசித்து மென்று
பெருநான் மறைமுடி பேசிய தத்துவமூன் றிவைகேட்
டொருநா ளுணர்ந்தவ ருய்யும்வகையன் றியொன்றுகவார்
இருநா லெழுத்தி னிதயங்க ளோதிய வொண்குணரே 10

எண்சீர்கழிநெடிலாசிரிய விருத்தம்.

காரணமாயு யிராகி யனைத்துங்காக்கும்
கருணைமுகில் கமலையுட னிலங்குமாறும்
நாரணனார் வடிவான உயிர்களெல்லாம்
நாமென்று நல்லடிமைக் கேற்குமாறும்

---

[ப - ரை.] ஒருநாள் - ஒருகாலத்திலே, திருநாரணன் - லக்ஷ்மியோடு கூடிய நாராயணன், எனும் - என்று சொல்லப்படுகிற, தெய்வமும் - பரதேவதையும், சித்தும் - சேதனமும், அசித்தும் - அசேதனமும், என்று - இப்படி, பெரு - பெரிதாகிய, நான்மறை - நான்கு வேதங்களின், முடி - சிரஸ்ஸு (உபநிஷத்பாகம்), பேசிய - அதனால் ப்ரதிபாதிக்கப்பட்ட, மூன்று - மூன்றுகளாகிய, இவை - இந்த, தத்வம் - தத்வங்களை, கேட்டு - ஸதாசார்யர்களிடத்திலே ஶ்ரவணம் பண்ணி, உணர்ந்தவர் - அறிந்தவர்களாகிய, இருநாலெழுத்தின் - திருவஷ்டாக்ஷரத்தின், இதயங்கள் - தாத்பர்யங்களில், ஓதிய - சொல்லப்பட்ட, ஒண் - விலக்ஷணமான, குணர் - குணங்களையுடையவர்கள், உய்யும் வகையன்றி - உஜ்ஜீவிக்கும் ப்ரகாரத்தைத் தவிர, ஒன்று - மற்றொன்றை, உகவார் - தமக்கு உபாதேயமென்று ஸந்தோஷப்பட மாட்டார்கள். 10

தாரணிநீர் முதலான மாயைகாலம்
 தனிவான் என்றிவை யுருவாந்தன்மைதானும்
கூரணிசீர்மதியுடையர் குருக்கள் காட்டக்
 குறிப்புடனுங் கண்டவகை கூறினோமே 11

ஸ்தநந்தயைரபி ஸஹஸைவ ஸுக்ரஹா
 ஸமுத்திதா நிதிரிவ வேங்கடேஶ்வராத்
பராவரஸ்திதிமிஹ தத்வ மாத்ருகா
 கரோத்யஸௌ கரதலமௌக்திகோபமாம்.

---

[ப - வை.] காரணமாய் - எல்லா வஸ்துவுக்கும் காரணமாய், உயிராகி - அவைகளுக்கு அந்தர்யாமியாகிய, அனைத்தும் - தன்னால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட எல்லாவற்றையும், காக்கும் - ரக்ஷிக்கிற, கருணைமுகில் - கருணையாகிய ஜலத்தை உள்ளேயடக்கிக் கொண்டிருக்கிற மேகம்போன்ற பகவானாகிய ஸ்ரீபதி நாராயணன், கமலையுடன் - இலக்ஷ்மியுடன், இலங்குமாறும் - ப்ரகாசிக்கின்ற விதத்தையும், நாரணனார் வடிவான - நாராயணனுக்குச் சரீரமான, உயிர்களெல்லாம் - ஜீவாத்மாக்களெல்லாம், நாம் வென்று - நாம் என்கிற அஹங்காரத்தை ஜயித்து, நல்லடிமைக்கு - நல்ல கைங்கர்யத்திற்கு, ஏற்குமாறும் - யோக்யர்களாகிறபடியையும், தாரணி - பூமி, நீர் - ஜலம், முதலான - இவை முதலாகிய, மாயை - ப்ரக்ருதி, காலம், தனி - அத்விதீயமான, வான் - ஆகாசம் (ஶுத்த ஸத்தவம்), என்றிவை - என்று சொல்லப்பட்ட இவைகள், உருவாம் தன்மைதானும் - ஶரீரங்களாயிருக்கும் ஸ்வபாவத்தையும், கூர் - கூர்மையினால், அணி - அலங்கரிக்கப்பட்ட, சீர் - க்ரஹணதாரணாதி குணங்களையுடைய, மதி - புத்தியையுடைய, குருக்கள் காட்ட - ஆசார்யர்கள் காட்ட, குறிப்புடன் - ஸாவதானத்துடன், நாம் - நாம், கண்டவகை - தெரிந்துகொண்ட விதமாக, கூறினோம் - சொன்னோம்.

[ப - வை.] ஸ்தநந்தயைரபி - சிறுவர்களாலும், ஸஹஸைவ - சீக்கிரத்திலேயே, ஸுக்ரஹா - ஸுலபமாயறியக்கூடியதாகிய, வேங்கடேஶ்வராத் - வேங்கடேஶனென்னும் திருநாமத்தையுடைய ஆசார்யனிடமிருந்து, நிதிரிவ - புதையல்போலே, ஸமுத்திதா - உண்டாயிருக்கிற, அஸௌ - இந்த, தத்வமாத்ருகா - தத்வமாத்ருகை என்

அக்ஷய்யஶாந்திமகரந்தரஸப்ரஸக்தா
நப்யர்த்தயே முரபிதங்க்ரி ஸரோஜப்ருங்காந்
காமம் ப்ரஸீதத யதாஹமநந்யபாவ:
கர்ணாம்ருதாநி பவதாமவதாரயேயம்

இதி கவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய
ஸ்ரீமத்வேங்கடநாதஸ்ய ஸ்ரீமத் வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
ஸ்ரீமத் தத்வமாத்ருகா ஸம்பூர்ணா.

கவிதார்க்கிகஸிம்ஹாய கல்யாணகுணஶாலிநே
ஸ்ரீமதே வேங்கடேஶாய வேதாந்தகுரவே நம:

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே ஶரணம்.

---

னும் ரஹஸ்யமானது, பராவரஸ்திதிம் - பரதத்வம், அவரதத்வம், இவைகளுடைய நிலைமையை, இஹ - இங்கேயே, கரதலமௌக்தி கோபமாம் - உள்ளங்கையிலிருக்கிற முத்துக்கு ஸமமாக, கரோதி - செய்கிறது.

[ப - ரை.] அக்ஷய்ய - அழிவில்லாத, ஶாந்தி - ஶாந்தியாகிற, மகரந்தரஸ - தேனின்ருசியில், ப்ரஸக்தாந் - மிகவுமாசையுள்ளவராய், முரபித் - பகவானுடைய, ஸரோஜ - தாமரைமலர்கள் போன்ற, அங்க்ரி - திருவடிகளில், ப்ருங்காந் - வண்டுகள்போன்ற மஹான்களை, அப்யர்த்தயே - ப்ரார்த்திக்கிறேன், (எவ்வாறெனில்) யதா - எப்படி, அஹம் - நான், அநந்யபாவ: - வேறு ஒரு ப்ரயோஜனத்திலும் செல்லாத மனதையுடையவனாய், பவதாம் - உங்களுக்கு, கர்ணாம்ருதாநி - காதுகளுக்கம்ருதங்களை, அதாவது ப்ரியங்களான வார்த்தைகளை என்றபடி அவதாரயேயம் - உண்டாக்கக் கடவேனோ (ததா - அப்படி) காமம் - மிகவும், ப்ரஸீதத - அனுக்ரஹத்தைச் செய்யுங்கள்.

ஸ்ரீ:

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

ஏழாவது ரஹஸ்யம்

# ஸ்ரீமத் ரஹஸ்யமாத்ருகை.

நேரிசை வெண்பா.

*அப்படிநின்றவமலன்படி யெல்லாம்*
*இப்படி யெம்முள்ளத்தெழுதினார்—எப்படியும்*
*ஓரார்சுருதி யொளியாலிருணீக்கும்*
*தாராபதியணைந்தார் தாம்.* 12

திருமந்த்ரத்தில் மூலமாகிய ஒற்றையெழுத்தான முதல்பதத்தில் முதலெழுத்திலே ஸ்ரீயப்பதியினுடைய ஸர்வஜகத் காரணத்வமும் (1), ஸர்வரக்ஷகத்வமும் (2) நித்யநிருபாதிக ஸர்வசேஷித்வமும் (3) ஜீவனுடைய நித்யநிருபாதிகசேஷத்வமும் (4) இதின் நடுவெழுத்திலே ஸ்ரீயப்பதிக்கு நிருபாதிகசேஷபூதனான ஜீவன் மற்றொருவர்க்குரியனல்லாதமையும் (5) மூன்றாமெழுத்திலே ஜீவனுடைய தேஹேந்ரியாதிகளில் வேறுபாடும் (6) அறிவானமையும் (7) அறிவுடையனானமையும் (8) இரண்டாகாரத்திலும் ஆநந்த ஸ்வரூபனாயிருக்கும்படியும் (9) ஸ்வயம் ப்ரகாசனாயிருக்கும்படியும் (10)தனக்குத்தான் தோற்றும்படியும் (11) அணுவானமையும் (12) "நம:" என்கிற இரண்

---

[ப - ரை.] எப்படியும் - எந்த விதத்தாலும், ஓர் - விசாரிக்கப்பட்டதான, ஆர் - பூர்ணமான, சுருதி-வேதமாகிற, ஒளியால் - ப்ரகாசத்தால், இருள்நீக்கும் - அஜ்ஞானமாகிய இருட்டை நீக்குகிற, தாராபதி - சந்திரனைப்போன்ற ஆழ்வார்களை, அணைந்தார்தாம் - ஆச்ரயித்தவர்களான ஸ்ரீமந்நாதமுனிகள் முதலான நம்மாசார்யர்கள், அப்படி நின்ற - அவ்விதமாக நிற்கிற, அமலன் - பகவானுடைய, படியெல்லாம் - ப்ரகாரங்களெல்லாவற்றையும், இப்படி-மேலே சொல்லப்போகிற விதமாக, எம்முள்ளத்து - எம்முடைய மனதில், எழுதினார் - ப்ரதிஷ்டிதமாக்கினார்கள். 12

டாம் பதத்திலே இஜ்ஜீவன் அநாதியாக விரோதிகையிலே யகப் பட்டு நின்றமையும் (13) நானொன்றையும்பற்ற நிருபாதிக ஶேஷி யல்லாமையும் (14) ஒரு கார்யத்திலும் நிரபேக்ஷகர்த்ருத்வமில்லா மையும் (15) ஸ்வதந்த்ர ஸ்வாமியாலே பாகவதஶேஷமாக விதி யுக்தனானபடியும் (16) அநந்யோபாயத்வமும் (17) உபாயவிஶேஷ பரிக்ரஹமும் (18) நலந்தருஞ் சொல்லான நாராயண ஶப்தத் தில் அசித்தினுடைய ஸ்வரூபாந்யதாபாவமும் (19) ஜீவர்களுக் கு ஸ்வரூபாந்யதா பாவமில்லாமையும் (20) க்ஷேத்ரஜ்ஞனுடைய ஸ்ருஷ்டி ஸம்ஹார விஷயத்வமும் (21) சேதனவர்க்கத்தினுடைய ஆநந்த்யமும் (22) ஸர்வநியந்தாவினுடைய ஸ்வரூப ஸ்வபாவநிக் யத்வப்ரகாரமும் (23) நேத்ருத்வமும் (24) ஸர்வவ்யாபகத்வமும் (25) ஸர்வாதாரத்வமும் (26) ஸர்வவித பந்துத்வமும் (27) ஸர்வவித புருஷார்த்தோபாயத்வமும் (28) முக்தப்ராப்யத்வமும் (29) இந் நாராயண ஶப்தத்தில் சதுர்த்தியிலே ஒழிவில் காலமெல்லாமுடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்யவேண்டும்படியும் (30) ப்ரதான மாக அனுஸந்தேயம்.

இப்படித் திருமந்த்ரத்தில் ஸர்வ வேதங்களுக்கும் விதை யான முதல் பதத்திலே முளைத்து இரண்டாம் பதத்திலே வளர்ந்து மூன்றாம் பதத்திலே பல பர்யந்தமான ஸம்யக் ஜ்ஞானத்தை யுடையவனுக்கு அனுஷ்டேயமான ஸாங்க பரஸமர்ப்பணத்தை விஶதமாக ப்ரகாஶிப்பிக்கிற த்வயத்தில் ப்ரதமாக்ஷரமான ஸ்ரீ ஶப் தத்திலே விஷ்ணுபத்நியாய் புருஷகார பூதையான வேரிமாறாத பூமேலிருப்பாள் வினைதீர்க்கும் ப்ரகாரங்களும் (31) அதன் மதுப் பிலே அலர்மேல்மங்கை அஶரண்ய ஶரண்யனனவன் மார்பிலே "அகலகில்லேனிறையும்" என்றுறையும்படியும் (32) நாராணய ஶப் தத்தில் "நிகரில்புகழாய்" இத்யாதிகளிலருளிச்செய்த ஶரண்ய ஸ்வபாவமும் (33) சரணசப்தத்தில் உபாயோபேய தசைகளையூடுருவி நிற்கிற திவ்யமங்கள விக்ரஹயோகமும் (34) "ஶரணம்" என்கிற ஶப்தத்திலே நின்சரணல்லால் சரணில்லையென்று கழல்களவையே ஶரணாகக்கொள்ளுகிறபடியும் (35) "ப்ரபத்யே" என்கிற பதத்திலே கத்யர்த்தமான தாதுவில் ப்ரமாணுநுஸாரத்தாலே அத்யவஸாயாதி பூர்வகமாக அடிக்கீழமர்ந்து அடைக்கலம் புகுகிறபடியும் (36) இப் பதத்தின் உத்தமனிலே களைகண் மற்றிலேனெனும்படி தானுந்

தமரும் பிறரும் தனக்குத் தஞ்சமன்றிக்கே புகலொன்றில்லாவடியே னென்று நிற்கிற நிலையும் (37) ஸ்ரீமதே என்கிற பதத்திலே பூவளருந் திருமகளால் பொன்னுலகிலருள்பெறுமவனுக்கு கோலத்திரு மாமகளோடுன்னை யென்னும்படி நின்ற ப்ராப்ய தம்பதிகளுடைய பிரிவற்ற சேர்த்தியும் (38) "நாராயணாய" என்கிற பதத்திலே வழுவிலாடிமைக்கு வகுத்தஶேஷியினுடைய நிரதிஶய போக்யத்வமும் (39) நமஶ்ஶப்தத்திலே ஸர்வ விரோதி நிவ்ருத்தி தசையில் வரும் கைங்கர்யங்களைப்பற்றி யிருக்கும்படியும் (40) ப்ரதானமாக அநுஸந்தேயம்.

இம்மந்த்ரங்களிரண்டிலும் தோற்றுகிற அநுஷ்டானத்திற்கு விதாயகமான சரம ஶ்லோகத்தில் "ஸர்வதர்மாந்" என்கிற பதத்திலே குறிக்கொள் ஞானங்களாலே பண்ணுமருந்தவங்களினுடைய நாநாவிதத்வமும் (41) "பரித்யஜ்ய" என்கிற பதத்திலே போக்கற்றவன் ப்ரும்மாஸ்த்ர துல்யையான ப்ரபத்தியைப் பண்ணும்போது அபேக்ஷிதாங்கங்களிலும் தனக்கு ஶக்யமில்லாதவற்றிலும் துவக்கற்று வெறுமையே துணையாக முன்னிடும்படியும் (42) "மாம்" என்கிற பதத்திலே மலர்மகள் விரும்பு நமரும் பெறலடிகள் பத்துடைய யடியவர்க்கெளியனாய் அருள்புரிந்த சிந்தையடியார் மேல் வைத்து அடைக்கலங்கொள்ள வொருப்பட்டு நிற்கிற நிலையும் (43) "ஏகம்" என்கிற பதத்திலே தாமரையாள் கேள்வனொருவனை பற்றிலார் பற்ற நிற்கிறபடியும் (44) "ஶரணம்" என்கிற பதத்திலே அஶரண்யஶரண்யன் விபரீதாபிஸந்தியற்ற தேவப்ருக்ருதிகளுக்கு வன்ஶரணாய்த் தன் சரணிழல் கீழ்வைக்க வகுத்தமையும் (45) "வ்ரஜ" என்கிற பதத்திலே நெறியெல்லா மெடுத்துரைத்த நிறைஞானத்தொரு மூர்த்தி தந்த ஞானக்கையாலே நின்னிலங்கு பாதமன்றி மற்றோர் பற்றிலேனென்று நாமவனைப் பற்றலாம்படி தன்பாதமே சரணாகத் தந்தொழிந்தமையும் (46) "அஹம்" என்கிற பதத்திலே வல்லை காணென்னும்படியான ஸர்வ ஶக்திகொழுஞ்சோதியுயரத்துக் கூட்டரிய திருவடிக்கள் கூட்டி அடிமைகொள்ள வொருப்பட்டபடியும் (47) "த்வா" என்கிற பதத்திலே நின்னருளே புரிந்திருந்தே னென்றிருக்கிற க்ருதக்ருத்யனை ஆராற்குறைவுடைய மென்னும்படி சாதகவ்ருத்தியாக்கினபடியும் (48) "ஸர்வபாபேப்ய:" என்கிற பதத்திலே "நானே

நாநாவித நரகம்புகும்பாவஞ் செய்தேன்'' என்றும், ''நம்மன்போலே வீழ்த்தமுக்கும் நாட்டிலுள்ள பாவமெல்லாம்'' என்றும் சொல்லுகிறபடியே எண்ணாராத்துயர் விளைக்கும் வல்வினையே மாளாதோ என்னும்படி எண்ணிறந்து கிடக்கிறபடியும் (49) ''மோக்ஷயிஷ்யாமி'' என்கிற பதத்திலே இருள்தருமா ஞாலத்துளினிப் பிறவி கழிந்து மருளொழிந்த மடநெஞ்ச முடையார்க்கு வேண்டிற்றெல்லாந்தரும் வள்ளல் மணிவண்ணன் விண்ணுலகந் தர விரைந்து சார்ந்த விருவல் வினைகளும் சரித்து மாயப்பற்றறுத்து தீர்ந்து தன்பால் மனம் வைக்கத்திருத்தி வீடுதிருத்துகிறபடியும் (50) ''மாஶுச:'' என்கிற வாக்யத்திலே உழலையென்பிற்பேய்ச்சி முலையூடு அவளையுயிருண்டான் கழல்களவையே சரணாகக்கொண்டு செய்த வேள்வியன் திருமால் தலைக்கொண்ட நங்கட்கெங்கே வருந்தீவினையே கூட்டரிய திருவடிக்கட் கூட்டினையான் கண்டேனே என்னும் தெளிவுற்ற சிந்தையாலே தேறி யாவச்சரீரபாதமாஜ்ஞாநுபாலனத்தாலே அக்னீந்த்ராதி ஶப்தங்களை ப்ரயோகிக்குமளவிலும் அங்கதேவதாபிஸந்திபற்ற ஸ்வயம் ப்ரயோஜன கைங்கர்ய ரஸத்தாலே க்ருதார்த்தனாயிருக்கும்படியும் (51) ப்ரதாநமாக அநுஸந்தேயம். இப்படி திருமந்த்ராதிகளில் முற்பட சிக்ஷிக்குமர்த்தமே மோக்ஷ ஶாஸ்த்ரங்களில் முதல் நடு விறுதியாக முகம்மாறிக் கோர்க்கிற வர்ணஸ்வரூபங்களுக் கெல்லாம் மாத்ருகை.

கட்டளைக் கலித்துறை.

செம்பொற் கழலிணைச் செய்யாளமரும் திருவரங்கர்
அன்பர்க் கடியவராயடிசூடிய நாமுரைத்தோம்
இன்பத்தொகையென வெண்ணிய மூன்றினெழுத்தடைவே
ஐம்பத்தொரு பொருளா ருயிர்காக்குமமுதெனவே. 13

---

[ப - ரை.] செம் - சிவந்த, பொன் - ஸ்வர்ணமயமான பூஷணங்களையுடைய, கழலிணை - இரண்டு திருவடிகளையுடைய, செய்யாள் - பெரிய பிராட்டியார், அமரும் - நித்யவாஸம் செய்கிற, திருவரங்கர் - ஸ்ரீரங்கநாதனுடைய, அன்பர்க்கு - பக்தர்களுக்கு, அடியவ

ஆசையுடையவர்களாயும், ரமாபதௌ-ஸ்ரீயஃபதியினிடத்தில், நிஹித பரை: - வைக்கப்பட்ட ரக்ஷணபரத்தை யுடையவர்களுமான ப்ர பன்னர்களினுல், உதீரிதா - சொல்லப்பட்டதாய்க்கொண்டு, ரஸா வஹா - ஆனந்தத்தைக் கொடுக்கிறதாக, பவதி - ஆகிறது.

[ப - ரை.] ஸேயம் - அப்படிப்பட்ட இந்த, ரஹஸ்யமாத்ருகா-ரஹஸ்யமாத்ருகை யென்கிற க்ரந்தமானது, விஶுத்ததேஶிகவதா - பரிசுத்தர்களான ஆசார்யர்களை யாஶ்ரயித்த, வேங்கடேஶவிபஶ்சிதா-வேங்கடநாதனென்கிற வித்வானுகிய ஆசார்யனுல், ரங்கதாம்நி - ஸ்ரீரங்கமென்கிற திவ்யக்ஷேத்திரத்தில், வ்யலிக்யத-எழுதப்பட்டது.